இலஞ்சம் தவிர் நெஞ்சம் நிமிர்

களம் -21 வெற்றி -03

# நேர்மை நெறி

மார்ச் 2023

(ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் திங்களிதழ்)


## (NERMAI NERI)

(Reg.No.349/2001)

தகுதி எனஒன்று நன்றே பகுதியால்
பாற்பட்டு ஒழுகப்பெறின்.

₹ 10

## கறுப்புப் பணமே நமது அரசியல் வாதிகளின் வாழ்க்கை




## ஊழல் நம் நாட்டின் சாபம்

PUBLISHED BY
ஊழல் எதிர்ப்பு இயக்கம் சென்னை
பதிவு மற்றும் செயல் அலுவலகம்: 155, “நம்பகம்”,
கொன்னூர் நெடுஞ்சாலை, அன்பகம், சென்னை-600023
Cell:8778312823
e-mail:acmchennai2001@yahoo.co.in
website:anticorruptionchennai.com

## நேர்மையானவர்கள் வாழ்வில் சில சம்பவங்கள்

### திறந்தே இருக்கும் பணப்பெட்டி

"சதி லீலாவதி" என்ற திரைப்படத்தின் வெளிப்புறப்படபடிப்பில் நடிப்பதற்காக கலைவாணர் என்.எஸ் கிருஷ்ணன் ஒரு முறை கல்கத்தாவிற்கு சென்றிருந்தார். அவருடன் பெரிய நடிகை குழுவே சென்றிருந்தது.

- **ஒரு நாள்**

நடிகர் குழுவில் இருந்த ஓர் துணை நடிகர் அவசரமாகச் சென்னை திரும்ப வேண்டியிருந்தது. அவரிடம் பணம் இல்லை; நடிப்பையும் விட்டுச் செல்ல முடியாத நிலை. என்ன செய்வதென்று புரியாமல் குழம்பிபோன அவர், தன் சூழ்நிலையை என். எஸ் கிருஷ்ணனிடம் கூறினார்

"அப்படியா விஷயம்! நீ நடிக்க வேண்டாம்: உடனே சென்னைக்குப் புறப்பட்டுச் செல்: என்றார் கலைவாணர் என்.எஸ் கிருஷ்ணன்

"பணம் வேண்டும் ஐயா!? என்றார் அந்த நடிகர்.

"ஏன் பெட்டியில் இருக்கிறது. போய் எடுத்துக்கொள்" என்றார் கலைவாணர் என்.எஸ் கிருஷ்ணன்

துணை நடிகர் தயங்கினார்

" என்ன தயக்கம்?" என்று திரும்பக் கேட்டார் கலைவாணர்

" ஐயா ! பெட்டிச்சாவி....!" என்று இழுத்தார் நடிகர்

கலவாணர் சிரித்தபடி, பெட்டிச்சாவியா? நான் எப்போது பூட்டினேன்? அது எப்போதும் திறந்து தான் இருக்கும். போய் உனக்குத் தேவையான பணத்தை எடுத்துக்கொள்", என்றார்

கலைவாணரின் சிறந்த குணத்தை எண்ணி வியந்தபடி துணை நடிகர் அந்த இடத்தை விட்டுச் சென்றார்

பணப்பெட்டியை மட்டுமல்ல; தனது மனதையும் எப்போதும் திறந்து வைத்திருந்தவர் கலைவாணர் என்.எஸ் கிருஷ்ணன்அவர்கள்



## தலைவர் மடல்

அன்பார்ந்த சகோதர சகோதரிகள் அனைவருக்கும் வணக்கம்.

நான் தலைமை பொறுப்பேற்ற பின், எழுதுகிற இந்த முதல் மடல் மூலம் உங்கள் அனைவரையும் தொடர்வு கொள்வதில் பெருமிதம் அடைகிறேன்.

நமது இயக்கத்தின் மாவட்டங்கள் மற்றும் கிளைகள் அளவில் சில காலங்களாக ஊழல் எதிர்ப்பு செயல்படுகளில் தொய்வு நிலை காணப்படுகிறது. நமது மாவட்டங்கள் மற்றும் கிளைகள் மீண்டும் துரித நிலையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

நாளொரு மேனி பொழுதொரு வண்ணம் என்பது போல் ஊழல் பெருகிக்கொண்டோ செல்கிறது. உதாரணமாக. ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில், அரசு இயாந்திரங்கள் எவ்வாறு செயல்பட்டன என்பதை நாம் பார்த்தோம் ஊழலை தடுக்க வேண்டியவர்களே ஊழலுக்குத் துணையாக நிற்பதையும் நாம் பார்த்தோம். இதையெல்லாம் மனதில் கொண்டு நாம் ஒவ்வொருவரும் எவ்வாறு ஊழலை ஒழிக்க செயல்பட வேண்டும் என்று திட்டமிட்டு அவ்வாறு செயல்பட்டு நாம் வெற்றி பெற வேண்டும்.

இந்தியாவில் செல்வம் சமமாகப் பங்கிடப்படுவதைத் தடுக்கும் பரவலான ஊழலுக்குப் புலம்பிய உச்ச நீதிமன்றம் வெள்ளிக்கிழமை கடுமையான வார்த்தைகளைக் கொண்ட தீர்ப்பை வழங்கியது.

இந்திய வருவாய் சேவை (ஐஆர்எஸ்) அதிகாரி மற்றும் மாநில அரசின் முன்னாள் ஆலோசகர் ஒருவருக்கு எதிரான முதல் தகவல் அறிக்கையை (எஃப்ஐஆர்) ரத்து செய்த சத்தீஸ்கர் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை ரத்து செய்யும் போது நீதிபதிகள் எஸ் ரவீந்திர பட் மற்றும் திபாங்கர் தத்தா ஆகியோர் அடங்கிய பெஞ்ச் இவ்வாறு அவதானித்துள்ளது

> "ஊழல் என்பது ஒரு சோகம், அதன் இருப்பு வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் பரவுகிறது. இது இப்போது நிர்வாகத்தின் செயல்பாடுகளின் கோளங்களுக்கு மட்டுப்படுத்தப்படவில்லை; வருந்தத்தக்க வகையில், பொறுப்புள்ள குடிமக்கள் இது ஒருவரின் வாழ்க்கை முறையாக மாறிவிட்டது என்று கூறுகிறார்கள். உண்மையில், இது நமது அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்கள் மனதில் கொண்டுள்ள உயரிய கொள்கைகளை உறுதியுடன் கடைப்பிடிப்பதில் ஒருபுறம் நிலையான சரிவு ஏற்படுவது மட்டுமல்லாமல், சமூகத்தில் ஒழுக்க விழுமியங்களின் சீரழிவு வேகமாக அதிகரித்து வருவதும் தான்."

**ஒன்றுபடுவோம் அறவழியில் போராடுவோம் குறிக்கோள்களை வெல்வோம்.**

வெ அய்யப்பன்

தலைவர்

---

**இயக்கத்துடன் தொடர்பு கொள்ள:**


திரு வெ அய்யப்பன் தலைவர் : 75501 82438

திரு V கார்த்திகை ராஜன், பொதுச்செயலாளர் : 87783 12823

திருமதி பாக்யலட்சுமி, மேலாளர் : 90031 25142

**E- Mail : acmchennai2001@yahoo.co.in**

**Website : anticorruptionchennai.com**

## பத்திரிகைகள் சந்திக்கும் படுபாதக அடக்குமுறைகள்!

***- சித்தார்த் வரதராஜன்***

February 4, 2023(aram onlie)

உண்மைகளைச் சொன்னால் கைதா? பாதிக்கப்பட்டவர்களின் குரலை பிரதிபலிப்பதே குற்றமா? இந்தியாவில் பத்திரிகை சுதந்திரம் படு மோசமாக உள்ளதா..? அதிகாரத்தின் அழுத்தங்களால் உண்மைகள் புதைக்கபடுகின்றனவா? ஆம்! பாஜக அரசு பற்றிய உண்மைகளை வெளியிடும் ஊடகங்கள் மிரட்டப்படுகின்றன என்கிறார், ‘தி வயர்’ சித்தார்த் வரதராஜன். மாற்றத்திற்கான ஊடகவியலாளர் சங்கம் ஏற்பாட்டில், ‘தி வயர்’ இணைய இதழின் நிறுவன ஆசிரியரான **சித்தார்த் வரதராஜன்**, பிப்ரவரி ஒன்றாம் தேதி உரையாற்றினார். காயிதே மில்லத் அறக்கட்டளையின் பொது வாழ்வில் நேர்மைக்கான விருதைப் பெற சென்னை வந்திருந்த அவர், பத்திரிகையாளர்கள் இடையே பேசினார்.

‘மோடியை பிரதம வேட்பாளராக பாஜக அறிவித்தபிறகு, தேர்தலுக்கு முன்பு மோடி திருச்சி வந்திருந்தார். ‘மோடியே திரும்பிப் போ’ என்று மக்கள் கலை இலக்கிய கழகம் ஆர்ப்பாட்டம் செய்தது. அப்போது இந்து நாளிதழின் ஆசிரியராக இருந்த சித்தார்த் வரதராஜன் இதனை முதற்பக்க செய்தியாக வெளியிட்டார். அப்போது, இது பத்திரிக்கையாளர்களிடையே பரபரப்பாக பேசப்பட்டச் செய்தி’ என்று தனது வரவேற்புரையில் **ஹாசிப்** குறிப்பிட்டார். சித்தார்த் வரதராஜன் உரையாடல் பாணியில் பேசியதை பீர் முகமது ஒருங்கிணைத்தார். அதனை கேள்வி – பதில் பாணியில் அறம் வாசகர்களுக்குத் தொகுத்து தருகிறார் பீட்டர் துரைராஜ்.

***சமீப காலங்களில் பத்திரிகையாளர்கள் மீது தொடுக்கப்படும் தாக்குதல் அதிகரித்து வருவது குறித்து என்ன நினைக்கிறீர்கள் ?***

ஊடகங்களின் மீதான தாக்குதல் உலகம் முழுவதும் அதிகரித்து வருகிறது. சமீபத்தில் பின்லாந்து நாட்டின் முன்னணி செய்திப் பத்திரிகையொன்று அந்நாட்டு ரகசியக் காவல்துறை குறித்து செய்தி வெளியிட்டது. அதனை எதிர்த்து வழக்குத் தொடுத்து இருக்கிறார்கள். ரஷ்ய அரசு எந்த அமைப்பையும் தேச விரோதம் என அறிவிக்க முடியும். அது வெளியிடும் செய்தியை மேற்கோள் காட்டினாலோ, அதற்கு செய்திக் கட்டுரை அனுப்பினாலோ, நிதி உதவி செய்தாலோ அரசு நடவடிக்கை எடுக்கலாம். துருக்கியில் பிரச்சினை இருக்கிறது. விக்கி லீக்ஸ் இணையத்தின் ஜூலியன் அசான்ஜே இலண்டனில் உள்ள ஈக்வெடார் தூதரகத்தில் தஞ்சம் அடைந்துள்ளார். அவரை நான் பார்த்தேன். கடுமையாக மன உளைச்சலுக்கு ஆளாகி இருக்கிறார். அவர் வெளியிட்ட செய்திகள் அமெரிக்க வெளிநாட்டு கொள்கையை கேள்விக்கு உள்ளாக்குகின்றன. அவர் மீதான அடக்குமுறை இன்னமும் தொடர்கிறது. அவரை அமெரிக்கா பிடித்துவிடும் என்றே நினைக்கிறேன். இத்தனைக்கும் அவர் பெயர்களை மறைத்து வெளியிட்டார். உயிருக்கு ஆபத்து இருக்கும் செய்திகளை வெளியிடவில்லை. பொதுநலன் சார்பான செய்திகளையே வெளியிட்டார்.

**உண்மையைச் சொல்ல நீதிபதிக்கே தடை!**

கேள்வி: ***இந்தியாவில் நிலைமை எப்படி இருக்கிறது ?***

2000 -ல் தில்லியில் நடந்த கலவரத்தில் இறந்து போனவர்களில் மூன்றில் இருவர் முஸ்லிம்கள்; சேதாரமான சொத்துகளில் 95 சதவீதம் முஸ்லிம்களுடையது; தாக்குதலுக்கு ஆளான வழிபாட்டுத் தலங்களில் 99% முஸ்லிம்களுடையது. இது குறித்து விசாரணை செய்து நீதிபதி மதன் லோகுர் ஒரு அறிக்கை தயாரித்தார். இந்த அறிக்கையை வெளியிடுவதை தடை செய்ய வேண்டும் என்று மத்திய அரசு தில்லி உயர்நீதி மன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளது. இது அதிர்ச்சிக்குரிய ஒன்று. இதன் மூலம் குடிமைச் சமூகங்களைச் சார்ந்தவர்களின் நடவடிக்கைகளை மோடி அரசு கட்டுப் படுத்துகிறது.

கடந்த காலங்களில், உண்மைகளை வெளிக்கொணர்வதில், அரசு சாரா ஆணையங்களே பெரும்பங்கு வகித்தன. 1984 ல் ஏற்பட்ட கலவரத்தில் 2000 பேர் இறந்ததாக அரசு கூறியது. சீக்கியர் மீதான கலவரங்கள், காங்கிரஸ்காரர்களால் காவல்துறை ஒத்துழைப்போடு நடத்தப்பட்டன. அரசு அமைத்த மிஸ்ரா ஆணையம் இதனை மறைக்கப் பார்த்தது. ஆனால் நடந்த கலவரத்தில் 5,000 பேர் கொல்லப்பட்டனர். இதனை மக்கள் சிவில் உரிமைக் கழகம், வி.ஆர். கிருஷண அய்யர், தார்குண்டே போன்றவர்கள் நடத்திய விசாரணைகளே வெளிப்படுத்தின. பெரும்பாலான தேசிய ஊடகங்கள், பாஜக அரசாங்கத்தோடு சமரசமாகிவிட்டன. ஆனாலும், நியூஸ் லாண்டரி, குவிண்ட், ஸ்க்ரோல், வயர் போன்ற இணைய இதழ்கள் நன்றாகவே செயல்படுகின்றன. ஏற்கனவே, 2015 ல் நீதிமன்றம் 66.A

பிரிவை ரத்து செய்துவிட்டது. அதனால், இப்போது புதிய தொழில்நுட்ப விதிகள் மூலம் இணைய ஊடகங்களை கட்டுப்படுத்த அரசு நினைக்கிறது.






***இப்போது பத்திரிகைத் நடத்துவது எப்படி இருக்கிறது ?***

தமிழ்நாட்டில் ஜெயலலிதா முதலமைச்சராக இருந்தபோது 'மாட்டிறைச்சி உண்ணும் மாமி' என்ற செய்திக் கட்டுரை வெளியிட்டதற்காக நக்கீரன் கோபால் வழக்குகளை எதிர்கொண்டார். இதே போன்ற செய்திக்காக இந்து பத்திரிகையாளர் கோலப்பனும் வழக்கை எதிர்கொண்டார். ஆசிரியர் என்ற வகையில் நானும் வழக்கை எதிர்கொண்டேன். பத்திரிகையாளர்கள் மீது இப்போது குற்றவியல் அவதூறு வழக்குகள் போடப்படுகின்றன. இதனால், பத்திரிகையாளர்களைக் கைது செய்ய முடியும். முன்பெல்லாம் சிவில் நட்ட ஈட்டு வழக்குதான் போடுவார்கள். அது நீதிமன்றத்தில் நடக்கும்.

உத்திரப் பிரதேசத்தில் கொரோனா காலத்தில் ரேஷன்கடையில் அரிசி,கோதுமை பற்றாகுறை இருந்ததை 'சிம்ப்ளிசிட்டி' என்ற இணையதளம் வெளியிட்டது. அதனை வெளியிட்ட பத்திரிகையாளர் கைது செய்யப்பட்டார். உத்திரப் பிரதேசம், காஜியாபாத்தில் ஒரு முஸ்லிம் முதியவர் ஒரு குறிப்பிட்ட மத கோஷத்தை போடச் சொல்லி தாக்கப்பட்டதை வெளியிட்ட பத்திரிகையாளர்கள் நான்கைந்து பேர்மீது வழக்குகள் பதிவாகின. இவர்கள் வகுப்புக்கலவரத்தை தூண்டுகிறார்கள் என காவல்துறை சொன்னது.

**விவசாயி கொல்லப்பட்டதை சொன்னால் தேசத் துரோக வழக்கு!**

தில்லி விவசாயிகள் போராட்டத்தின்போது டிராக்டர் ஏற்றி ஒருவர் கொல்லப்பட்டார் என தி வயர் செய்தி வெளியிட்டது. இதற்காக காவல்துறை எங்கள் மீது தேசதுரோக வழக்குப்போட்டது.

இதற்கு முன்பெல்லாம் தவறாக செய்தி வந்தால், அந்த செய்தி தவறானது என கடுமையான மொழியில் அறிக்கையொன்றை காவல்துறை வெளியிடும்; அதோடு, அந்தப் பிரச்சினை முடிந்துவிடும். இப்போதோ வழக்குகள் போடப்படுகின்றன. புதிய தகவல் தொழில்நுட்ப விதிகளின்படி ஒரு செய்தி தவறானது என அரசு கருதினால் அதனை நீக்க வேண்டும் என அரசு உத்தரவிட முடியும். அதோடு, இணைய இதழ்கள் 'வாசகர்கள் குறை தீர்ப்பு அலுவரை' நியமிக்க வேண்டும். அவரிடம் வாசகர்கள் ஒரு செய்தி தவறானது என முறையிடலாம். 48 மணி நேரத்தில் அதற்கான திருப்திகரமான பதில் கிடைக்கவில்லை என்றால், அதனை எதிர்த்து அரசிடம் முறையிட முடியும். இப்போதுள்ள சூழலில், வாசகர் பெயரில் புகார்களை உருவாக்குவது எளிதானதே. அப்படி ஒரு ஆணையை அரசு பிறப்பித்தால், அதன் பிறகு யாரும் அந்தச் செய்தியை பகிர முடியாது.

**பிபிசி ஆவணப் படத் திரையிடலுக்கு நெருக்கடிகள்!**

அவசரகால அதிகாரத்தின் கீழ்தான் பிபிசி ஆவணப்படத்தை முகநூல், டிவிட்டர் பகிரக் கூடாது என அரசு ஆணையிட்டது. இதற்கு எந்த எதிர்ப்பும் காட்டாமல் டிவிட்டர் உடனே பிபிசி ஆவணப்படத்தை நீக்கிவிட்டது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. ஏற்கனவே இது போன்ற ஒரு சம்பவத்தில், பெங்களூரில் கர்நாடக அரசை எதிர்த்து, டிவிட்டர் வழக்குத் தொடுத்தது. இணைய இதழ்களுக்கும் அரசியல் சாசனம் வழங்கியுள்ள பேச்சுரிமை உள்ளது. பிபிசி ஆவணப்படம் தடை செய்யப்படவில்லை. ஆனால் இதனை வெளியிட முனைந்த மாணவர்கள் தடுக்கப்பட்டார்கள். விசாரணைக்கு ஆளானார்கள்! இதனை திரையிட முனைந்த நேரத்தில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. ஓய்வு பெற்ற நீதிபதி விசாரணை செய்யக் கூடாது என்கிறார்கள். குடிமைச் சமூகங்கள், மாணவர்கள் என அனைத்துப் பிரிவினரும் தாக்குதலுக்கு ஆளாகி வருகின்றனர்.

மாநில உரிமைகள் பறிக்கப்படுகின்றன. பேச்சுரிமைக்கு சுதந்திரம் உள்ளது. ஆனால் பேசியபிறகு உங்களுக்கு சுதந்திரம் இல்லை என்பது தான் யதார்த்தம். என்ன செய்ய வேண்டும் என்பது தனிபரின் மனசாட்சியையும், அவரது திறமையைப் பொறுத்தே அமைகிறது.

**கேள்வி: *நீங்கள் நடத்திவரும், 'தி வயர்' இணைய இதழைப் பற்றி சொல்லுங்களேன் ?***

2015 ஆம் ஆண்டு தி வயர் இணைய இதழை அரசாங்க அழுத்தமோ, நிறுவனங்களின் அழுத்தமோ இல்லாத வகையில் நடத்த வேண்டும் என்று தொடங்கினோம். ஓரிரு விளம்பரதாரர்களை மட்டும் நம்பி இருக்கக் கூடாது என நினைத்தோம். இப்போது கூட நாங்களாக விளம்பரத்திற்கு போவதில்லை. கூகுள் வழியாக வரும் விளம்பரம் தான்.

**'தி வயர்' இணைய இதழின் ஆசிரியர் சித்தார்த் வரதராஜன்**

ரபேல் ஊழல் குறித்த செய்திக் கட்டுரைகளை வெளியிட்டதற்காக இந்து நாளிதழுக்கு அரசாங்க விளம்பரம் (DVAP) விளம்பரம் நிறுத்தப்பட்டது. இது மக்களின் வரிப்பணம். யாருக்கு விளம்பரம் தருவது என்பதை முடிவு செய்வதில் பாரபட்சம் இருக்க கூடாது. கோவிட் – 2 கால கட்டத்தில் அரசு சொன்னதை விட, கூடுதலாக மரணங்கள் ஏற்பட்டன என்பதை மயானங்களுக்குச் சென்று விசாரித்து, உண்மையைச் சொன்ன செய்தி நிறுவனத்தைச் சார்ந்தவர்களிடம் சோதனைகள் நடத்தப்பட்டன. ஹிட்டன்பர்க் அறிக்கை நம்மபகத் தன்மை உடையது. அதனால் தான் அதானி பங்குகள் மளமள வென்று சரிந்தன. செய்தி வெளியான ஒரே வாரத்தில் உலகத்தின் மூன்றாவது பெரிய பணக்காரர் என்ற நிலையில் இருந்து பத்தாவது இடத்திற்கு வந்துவிட்டார்.

என்டிடிவி ஓரளவு நம்பகத் தன்மையோடு செயல்பட்டு வந்தது. அதனுடைய பிரனாய் ராய் மீது நான்கு ஆண்டுகளுக்கு முன்பு எச்டிஎஃப்சி வங்கி விவகாரத்தில் வழக்கு வந்தது. அரசு இயந்திரங்கள் தவறாக பயன்படுத்தப்படுகின்றன.

**காஷ்மீரில் நடப்பது இந்தியா முழுமையும் நடக்கும்!**

தி வயர் புதிய தொழில் நுட்ப விதிகளை எதிர்த்து தடை ஆணை பெற்றது. இதனைத் தொடர்ந்து மேலும் பல நிறுவனங்கள் தடை ஆணையைப் பெற்றன. தி வயர் இதழுக்கு, காஷ்மீரின் கள நிலவரத்தை தர வேண்டும் என்று 40 பத்திரிகையாளர்களிடமாவது கேட்டிருப்போம். அச்சத்தின் காரணமாக யாரும் முன் வரவில்லை. ***இன்று, காஷ்மீரில் நடப்பதைத் தான் நாளை இந்தியா முழுவதும் விரிவுபடுத்த இருக்கிறார்கள்.*** இனி வரும் காலம் பத்திரிக்கையாளர்களுக்கு மேலும் கடினமாகவே இருக்கும். ஹிட்டன்பர்க் அறிக்கை வெளிவந்த முதல் நான்கைந்து நாட்கள் ஆன பின்னரும் அதுபற்றிய விவாதத்தை என்டிடிவி நடத்தவில்லை.

கேள்வி: ***புதிய காலக்கட்டத்தில் பத்திரிகை நடத்துவதை எப்படி பார்க்கிறீர்கள் ?***

தி வயர் இதழ் ஆறு இலட்ச ரூபாய் மூலதனத்தில் தொடங்கப்பட்டது. நான், எம்.கே.வேணு, சிதார்த் பாட்டியா ஆகியோர் இணைந்து உருவாக்கினோம். இப்போது அதனுடைய வருடாந்திர பட்ஜெட் 5 கோடி. ஆரம்ப காலத்தில் காணொளி வெளியிடுவது குறித்த நாங்கள் யோசிக்கக் கூட இல்லை. வினோத் துவா காணொளி வெளியிடுவதில் இணைந்து கொண்டார். இப்போது கரண் தாப்பர் வெளியிடும் பேட்டி வருகிறது. தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு அடுத்தபடியாக, அதிக பார்வையாளர்களை கொண்டது தி வயர்தான். நாற்பது இலட்சம் பேர் பார்க்கிறார்கள். பல இதழ்கள் தி வயரின் மொழிபெயர்ப்புகளை வெளியிடுகிறார்கள். இதனை பகிர்கிறார்கள். இதனால் இதன் வீச்சு அதிகமாகி வருகிறது. அதனால் தான் பகிர்வதை (share) தடுக்க அரசு விரும்புகிறது. எனவே தான் நியூஸ் லெட்டர் என்ற பாணியில் வாசகர்களை நேரடியாக தொடர்பு கொள்ள விரும்புகிறோம்.

கேள்வி: ***அரசாங்க தரப்பு தாக்குதல்களை எப்படி எதிர்கொள்வது ?***

பல்வேறு நெருக்கடிகளுக்கிடையிலும் பல நிறுவனங்கள் நன்கு செயல்படுகின்றன. இது போன்ற 100 நிறுவனங்களுக்கு இடையே ஒருவிதமான கூட்டமைப்பை உருவாக்கியுள்ளோம். ஏனெனில், அச்சு ஊடகம் மக்களை சென்றடைய (delivery) நிறைய பொருட் செலவாகும். ஆனால், மின்னிதழ்களுக்கு அத்தகைய நெருக்கடி இல்லை. மக்களை சென்றடைய ஏராளமான வாய்ப்புகளை தொழில்நுட்பம் உருவாக்கி உள்ளது. ஜெயா டிவி நிருபர் பாதிக்கப்பட்டால், சன் டிவி நிருபரும் அரசியலுக்கு அப்பால் ஆதரவு அளிக்க வேண்டும். இதே போல அர்னாப் கோஸ்வாமி மீது, ஒரே சம்பவத்திற்காக அவர் மீது நான்கு இடங்களில் வழக்கு பதிவு செய்யப்பட்ட போது, அவரை எனக்கு பிடிக்காது என்றாலும்,

அவருக்கு ஆதரவாக நான் இருந்தேன். ஆல்ட் நியூஸ் நடத்திய முகமது ஜூபர் இரண்டு வாரங்களுக்குப் பிறகு தான் சிறையில் இருந்து வெளிவர முடிந்தது. இது போல தனியாக செயல்படுபவர்கள் அனேகம் பேர் உள்ளனர். அவர்களுக்கு நெருக்கடியான நேரங்களில் ஆலோசனை, வழக்கறிஞர்களை ஏற்பாடு செய்தல் போன்ற செயல்கள் மூலம் ஆதரவளிக்க முடியும்.

கோயம்பத்தூர் சம்பவத்தில் அரசு தனது அதிகாரத்தை தவறாக பயன்படுத்தியதை ஊடகங்கள் கண்டிக்கவில்லை. இப்போது தில்லி, மும்பையில் உள்ள பத்திரிகையாளர் சங்கங்கள் முனைப்பாக செயல்படத் தொடங்கியுள்ளன. ஒரு நிறுவனம் வெளியிடும் செய்தியை மற்ற நிறுவனங்கள் தொடர்ந்து எழுதுவதில்லை. நான் ஹிந்துஸ்தான் பத்திரிகையில் ஆறாவது பக்கத்தில் சிறிய பத்தியில் வந்த செய்தியை மேலும் விசாரித்து முக்கிய செய்தியாக்கினேன்.

உச்சநீதிமன்ற தீர்ப்புக்குப் பிறகு அரசு தீஸ்தா செதால்வாட் டையோ, ஸ்ரீ குமாரையோ கைது செய்யாமல் இருந்திருந்தால் 2002 ல் நடந்த குஜராத் படுகொலை மீண்டும் செய்தியாகி இருக்காது. இப்படி பல வாய்ப்புகள் அதுவாகவே அமையும். அதிக அளவில் பெண்கள் செய்தியாளர்களாக இருபது உண்மைதான். ஆனால், தலைமைப் பொறுப்பில் இந்து, டெக்கான் ஹெரால்டு என ஒரு சில நிறுவனங்களில் மட்டுமே பெண்கள் உள்ளனர். பல சாதியினரும் இருப்பது, எந்த செய்தியை தேர்ந்தெடுப்பது என்பதில் முக்கிய காரணியாக விளங்கும். அமெரிக்கா போன்ற நாடுகளில் செய்தி அறைகளில் பல இனத்தவரும், பிரிவினரும் இருக்கும் வகையில் பார்த்துக் கொள்கிறார்கள்.

நான் வாழ்க்கையை எப்போதும் நம்பிக்கையோடு பார்ப்பவன். இப்போது இந்த அரங்கில் இத்தனை பேர் கூடியிருப்பதையே நான் ஆரோக்கியமான விஷயமாகவே பார்க்கிறேன்.

தொகுத்து எழுதியவர்; **பீட்டர் துரைராஜ்**

---

## ஒரு கிரேக்க ஆராய்ச்சியாளரின் (Prof.Vyron Collin ) இந்தியாவை பற்றிய மதிப்பீடு.

-ஒரு தடவை கிரேக்க இனத்தவரும் ஓவியரும் பேராசியரும் ஜெர்மனியில் ஒரு பல்கலைக்கழகத்தில் உயிரியல் விஞ்ஞானியுமாகிய Prof.Vyron Collin என்பவரின் அறிமுகம் கிடைத்தது. மூணாறிலும் வைப்பினிலும் போர்ட் கொச்சியிலும் மக்களின் வாழ்க்கையை ஆழ்ந்து கவனித்து வந்த அவருக்கு இந்தியாவைப்பற்றிய சிறந்த அறிவு அவருக்கு இருப்பதாய் தெரிந்துகொண்டேன்.

ஒரு மாலை நேரத்தில் தேநீர் வேளையில் அவரிடம் ஒரு கேள்வி கேட்டேன். "நீங்கள் இந்தியர்களை வெள்ளாயினத்தவர்களாகவா, கறுப்பினத்தவர்களாகவா இல்லை இரண்டுக்கும் இடையிலானவர்களாவாகா பார்க்கிறீர்கள்?" இதற்கான பதிலாக அவர் " Indians are pretty amazing people " என்றார். அந்த பதில் எனக்கு புல்லரிப்பை கொடுத்ததனால், அதோடு விட்டுவிட்டேன். ஒருவார காலம் மூணார் வட்டவட கிராமங்களில் சுற்றித்திருந்து குறிப்புகள் எழுதி, மீதமுள்ளவைகளை லேப்டாப்பில் குத்தி நுழைத்துவிட்டு தன்னுடைய ஊரை நோக்கி பயணமானார்.

சில வருடங்களுக்குப்பின் நியூசிலாந்தில் ஒட்டாகோ பல்கலை கழகத்தில் வகுப்பெடுக்க வந்தபோது தான் மீண்டும் அவரை பார்த்தேன். பழைய கேள்வியை மீண்டும் அவரிடம் நினைவுபடுத்தினேன். அவர் சொன்னார். " உங்கள் நாட்டிலிருந்துகொண்டு எந்த வெளிநாட்டவரும் உங்களுக்கு பிடிக்காத ஒரு பதிலை கொடுத்து உங்கள் வெறுப்பையும் கோபத்தையும் சம்பாதிக்க விரும்பமாட்டார். அதையே நானும் செய்தேன். ஆனால் உண்மையான பதில் அதுவல்ல " என்று ஒரு போடு போட்டார்.

“பல வளர்ந்த நாடுகளும் உங்களை அதிக கல்வியறிவுபெற்ற ஒரு பழங்குடியினமாக தான் இப்போதும் பார்க்கிறார்கள” என்றார். உலகத்திலே சிறந்த நாடு நம் நாடு என்று நினைத்துக்கொண்டிருக்கும் பலருக்கு இது தாங்கமுடியாத ஏமாற்றத்தை அளிக்கும் பதில் தான். ஆனால் ஒரு உயிரியல் அறிஞர், மனோதத்துவ அறிஞர், வரலாற்று ஆசிரியர், பேராசியர் போன்ற பன்முக திறமைகொண்ட ஒருவரின் இந்த பதிலுக்கான காரணத்தை அவரிடம் நான் சற்று விளக்கமாக தர கேட்டேன். அவர் சொன்னார்...

உங்களில் பல கொண்டாட்டங்களும், வழக்கங்களும் உலகிலுள்ள பல பழங்குடியின மக்களின் குணங்களையொத்தே இருக்கின்றது. உங்கள் சாதியிலும் கோத்திரத்திலும், கோத்திர வழக்கத்திலும் மூழ்கியிருக்கிறீர்கள். ஒரு கோத்திரத்திலுள்ளவர்கள் அடுத்த

கோத்திரத்திலுள்ளவர்களோடு உறவு வைக்கவே பயப்படுகிறீர்கள். என்னதான் படித்தவர்களானாலும் அதுவே தான் செய்கிறீர்கள்.

எவ்வளவு கல்வியறிவு பெற்றாலும் பல ஆப்பிரிக்க கோத்திரங்களைப்போலவே உங்கள் பெண்களில் பலருக்கும் சுதந்திரமாக வேலைக்கு போகவோ ஆண் துணையின்றி வெளியே செல்லவோ, திருமணம் செய்யாமல் தனியாக வாழவோ, விரும்பியதை செய்யவோ முடியாது. வரதட்சிணை போன்ற பொருளாதார சங்கிலிகளால் உங்களுக்கு விருப்பமில்லாத செயல்களை செய்யாமலிருக்கும்படி பெண்ணை அடிமைப்படுத்தியிருக்கிறீர்கள். ஆண்கள் எப்போதுமே பெண்களைவிட உயர்ந்தவர்கள் என்ற கர்வத்தை உறுதிப்படுத்துகிறீர்கள். பெண்களை வீட்டுவேலைக்காரியாக அல்லது சமையல்வேலைக்காரியாக மட்டுமே பார்ப்பவர்கள் தான் அதிகமும். இதெல்லாம் நூற்றாண்டுகளுக்கு முன்னர் நாகரீகமற்ற பழங்குடிகள் வாழ்க்கையில் கடைபிடிக்கப்பட்டவைகள்.

பல கோத்திரங்களும் அந்தந்த கோத்திரங்கள் வழக்கங்களை பின் தொடராதவர்களுக்கு ஊர் விலக்கு ஆணை பிறப்பிப்பதும் அதை செய்வது கோத்திர தலைவனோ அல்லது அவனது அடிவருடிகளோ ஆகும். அதையே உங்கள் மத அல்லது சாதி தலைவர்கள் இப்போதும் செய்கிறார்கள். புது வீட்டில் குடியேறவும் இறந்தபின்னர் சடங்குகள் செய்வதும் இறந்தவரின் ஆவிக்கு மரியாதை செலுத்துவதும் மோட்சத்திற்கு வழிசொல்லுவதும் பல கோத்திரங்கள் வழக்கங்களில் வேறுபாடுகள் இருக்கலாம். அதை தான் நீங்களும் இப்போதும் செய்கிறீர்கள். அதிலிருந்து சிறிதும் வேறுபட நீங்கள் விரும்புவதில்லை என்று மட்டுமல்ல நீங்கள் அப்படி செய்வதில் பெருமை கொள்கிறீர்கள். இந்தியாவில் இப்படி செய்யும் ஒவ்வொரு கோத்திரமும் ஒரு தனி சாதியாகும்.

ஒரு மிசைலோ, ராக்கெட்டோ ஏவுவதற்கு முன் பூஜை என்ற கோத்திர வர்க்க வழக்கத்தை செய்வதில் இன்னும் நம்பிக்கை வைக்கிறீர்கள். அது தவறு என்று நான் சொன்னால் அதில் தவறு இல்லை என்று சொல்லும் நிறையபேர் உலகில் இன்றும் இருக்கிறார்கள். சுதந்திரம் நிறைந்த பொருளாதாய உலகில் பக்தியும், நம்பிக்கையும் கோத்திர வழக்கங்களும் நிறைந்த ஒரு உலகத்தை காணவே இந்தியாவிற்கு வருகிறார்கள். உங்கள் கோயில்களின் சிற்பகலை பெருமையும் அதன் அழகும் வேறு எந்த நாட்டு கோத்திரங்களுக்கும் கிடைத்திராதது. இன்னொருவகையில் சொன்னால் நாகரீகமடைந்த ஆனால் பழமையும் கோத்திரகுணங்களும் மூடவழக்கங்களும் விட்டு மாறாத ஒருவகை மக்கள் நிறைந்த நாடு தான் இந்தியா.

சுகாதாரமின்மை, கையூட்டு, லஞ்சம், ஊழல் இவைகளை மாற்றிவிட்டால் பல நாடுகளின் நிலைமை இந்தியாவிற்கு பின்னால் தான்.

காலத்திற்கேற்றபடியே உங்கள் அரசியல் அமைப்பில் மாற்றங்கள் தேவைப்படுகிறது. தனிநபர் சுதந்திரம் என்பதே உங்கள் நாட்டில் இல்லை. மற்றவர்களின் சுதந்திரத்தில் ஒருவர் எந்த கூச்சமுமின்றி தலையிடுவார்கள். அறிமுகமில்லாத ஒருவனைக்கூட நிர்வாணப்படுத்தும் பார்வையை பார்ப்பீர்கள். தனிநபர் உரிமையை பலமான சட்டங்களால் பாதுகாக்கவேண்டியிருக்கிறது.

**கையூட்டு இல்லாமல் எந்த செயலும் உங்கள் நாட்டில் நடக்காதது ஒரு பேரழிவு ஆகும். உங்கள் மண்டைக்குள் படிந்து கிடைக்கும் சில வெத்துவேட்டு அரசியல் நம்பிக்கைகள் தான் உங்களுக்கு நல்ல அரசியல் வாதிகளை தேர்ந்தெடுக்க முடியாததற்கு காரணம். உங்களுக்கு நல்ல அரசியல்வாதிகளை தெரிந்தெடுப்பதற்கான பயிற்சி தேவைப்படுகிறது. உங்கள் மூட நம்பிக்கைகள் போலவே தான் உங்கள் அரசியல் நம்பிக்கைகளும் இருக்கிறது.**

உலகின் மாற்றங்களை நீங்கள் உற்று நோக்கவோ, புரிந்துகொள்ளவோ, அறிவுடையோர் சொல்வதைக் கூர்ந்து கேட்க வேண்டும்

இயக்கத்துக்கு நன்கொடைகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.
நன்கொடைகள். வருமான வரிச்சட்டம் பிரிவு 80 (G) யின் கீழ் விலக்கு(சலுகை) உள்ளது. பணத்தை கீழ்க்கண்ட வங்கிக்கு **NEFT** மூலமாக அனுப்பலாம் .
**Indian OverSeas Bank, Ayanavaram Branch (IFSC Code: IOBA0000009)**
**Savings A/C No: 000901000041657**

## நல்லவர்கள் புறக்கணிக்கப்படுவது நாட்டுக்கு நல்லதல்ல

*பின்வருவதை யார் எழுதியிருந்தாலும், இது ஒரு அற்புதமான கட்டுரை.*

ஒவ்வொரு படத்திற்கும் 50 கோடி அல்லது 100 கோடி வாங்கும் இந்த நடிகர்கள் நடிகைகள் என்ன செய்கிறார்கள் என்பது எனக்கு ஒன்றுமே புரியவில்லை ?

சிறந்த விஞ்ஞானிகள், மருத்துவர்கள், பொறியாளர்கள், பேராசிரியர்கள், அதிகாரிகள் போன்றவர்கள் ஆண்டுக்கு 10 லட்சம் முதல் 20 லட்சம் ரூபாய் வரை சம்பாதிக்கும் நாட்டில், அந்த நாட்டில் ஒரு திரைப்பட நடிகர் ஆண்டுக்கு 10 கோடி முதல் 100 கோடி ரூபாய் வரை சம்பாதிக்கிறார்.

எல்லாவற்றிற்கும் மேலாக அவர் என்ன செய்கிறார்? நாட்டின் வளர்ச்சியில் அவர்களின் பங்களிப்பு என்ன? எல்லாவற்றிற்கும் மேலாக, அவர் / அவள் என்ன செய்கிறார், அவர் / அவள் ஒரு வருடத்தில் இவ்வளவு சம்பாதிக்கிறார், நாட்டின் தலைசிறந்த விஞ்ஞானிக்கு 100 ஆண்டுகள் ஆகலாம்!

இன்று, நாட்டின் புதிய தலைமுறையினரைக் கவர்ந்த மூன்று பகுதிகள் சினிமா, கிரிக்கெட், அரசியல். இம்மூன்று துறைகளைச் சேர்ந்தவர்களின் சம்பாத்தியமும், கௌரவமும் எல்லா வரம்புகளுக்கும் அப்பாற்பட்டது. இந்த மூன்று பகுதிகளும் நவீன இளைஞர்களின் இலட்சியங்கள் ஆகும், அதே நேரத்தில் அவர்களின் நம்பகத்தன்மை தற்போது கேள்விக்குறியாக உள்ளது. அதனால் நாட்டுக்கும் சமுதாயத்திற்கும் பயனில்லை.

பாலிவுட்டில் பல நெறிமுறைகள் இழந்தன, கிரிக்கெட்டில் மேட்ச் பிக்சிங், போக்கிரித்தனம் மற்றும் அரசியலில் ஊழல். இதற்கெல்லாம் பணம்தான் முக்கிய காரணம், இந்தப் பணத்தை அவர்களிடம் கொண்டு சேர்ப்பது நாம்தான். சொந்த பணத்தை எரிப்பதன் மூலம் நமக்கு நாமே தீங்கிழைக்கிறோம். இது முட்டாள்தனத்தின் உச்சம்.

70-80 ஆண்டுகளுக்கு முன்பு வரை பிரபல நடிகர்கள் சாதாரண சம்பளம் பெற்று வந்தனர். 30-40 ஆண்டுகளுக்கு முன்பு வரை, கிரிக்கெட் வீரர்களின் சம்பாத்தியமும் சிறப்பாக இல்லை. 30-40 ஆண்டுகளுக்கு முன்பு வரை அரசியலில் இவ்வளவு கொள்ளை யடிக்கப்படவில்லை. மெதுவாக அவர்கள் எங்களை கொள்ளையடிக்க ஆரம்பித்தனர், நாங்கள் மகிழ்ச்சியுடன் கொள்ளையடித்தோம். இந்த மாஃபியாக்களின் பிடியில் சிக்கி, நம் குழந்தைகளின் எதிர்காலத்தையும், நம் நாட்டையும் அழித்துக் கொண்டிருக்கிறோம்.

50 ஆண்டுகளுக்கு முன்பு வரை, திரைப்படங்கள் இவ்வளவு அசிங்கமாகவும், ஸ்லோவாகவும் எடுக்கப்படவில்லை. கிரிக்கெட் வீரர்களும் அரசியல்வாதிகளும் அவ்வளவு திமிர்பிடித்தவர்கள் அல்ல. இன்று அவர்கள் நம் கடவுளாக (?) மாறிவிட்டார்கள். இப்போது இவர்களை தலையில் இருந்து தூக்கி வசைபாட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஒருமுறை, அப்போதைய வியட்நாம் அதிபர் ஹோ-சி-மின் இந்தியா வந்தபோது, இந்திய அமைச்சர்களுடனான சந்திப்பில், "நீங்கள் என்ன செய்கிறீர்கள்?" என்று கேட்டார். இந்த மக்கள் சொன்னார்கள் - "நாங்கள் அரசியல் செய்கிறோம்." இந்த பதிலை அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை, அதனால் அவர் மீண்டும் கேட்டார் - "அதாவது, உங்கள் தொழில் என்ன?" இந்த மக்கள் சொன்னார்கள் - "அரசியல் எங்கள் தொழில்."

ஹோ-சிமின் சற்று எரிச்சலுடன் சொன்னார் - "ஒருவேளை உங்களுக்கு என் அர்த்தம் புரியாமல் இருக்கலாம். நானும் அரசியல் செய்கிறேன், ஆனால் தொழிலால், நான் ஒரு விவசாயி, நான் விவசாயம் செய்கிறேன். விவசாயம்தான் என் வாழ்வாதாரம். காலையிலும் மாலையிலும் நான் எனது வயல்களுக்குச் செல்லுங்கள், நான் வேலை செய்கிறேன், பகலில் ஜனாதிபதியாக எனது பொறுப்பை நான் செய்கிறேன். ஹோ-சி-மின் மீண்டும் அதையே கேட்டபோது, தூதுக்குழுவின் உறுப்பினர் ஒருவர் தோள்களைக் குலுக்கி - "அரசியல் எங்கள் தொழில்" என்றார்.

அவரது கேள்விக்கு இந்திய தலைவர்களிடம் பதில் இல்லை என்பது தெளிவாகிறது. இந்தியாவில் 6 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்களின் வாழ்வாதாரம் அரசியலால்

ஆதரிக்கப்படுவதாக பின்னர் ஒரு கணக்கெடுப்பு வெளிப்படுத்தியது. இன்று இந்த எண்ணிக்கை கோடிகளை எட்டியுள்ளது.

சில மாதங்களுக்கு முன்பு, கொரோனாவால் ஐரோப்பா அழிந்து கொண்டிருக்கும் போது, மருத்துவர்களுக்கு தொடர்ச்சியாக பல மாதங்கள் கொஞ்சம் கூட விடுப்பு கிடைக்காததால், போர்ச்சுகல் மருத்துவர் ஒருவர் கோபமாக கூறினார் - "ரொனால்டோவிடம், நீங்கள் மில்லியன் கணக்கான டாலர்களைக் கொடுப்பீர்கள். பார்க்க, நானும் என் குடும்பமும் வாழ்வதற்கு எனக்கு சம்பளமாக சில ஆயிரம் டாலர்கள் மட்டுமே கிடைக்கிறது. எந்த ஒரு ஆராய்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் நீங்கள் ஒரு பைசா கூட பங்களிக்காத போது, இதுபோன்ற சிகிச்சையை நாங்கள் எப்படி கண்டுபிடிப்போம் என்று எதிர்பார்க்கிறீர்கள்? ஒரு கொடிய வைரஸ், ஒரே இரவில். ரொனால்டோ மற்றும் போன்றவர்களிடம் சென்று சிகிச்சைக்காக கேளுங்கள்."

இளம் மாணவர்களின் இலட்சியங்கள் விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள், கல்வியாளர்கள் அல்ல, ஆனால் நடிகர்கள், அரசியல்வாதிகள் மற்றும் விளையாட்டு வீரர்களாக இருக்கும் நாட்டில், அவர்களுக்கென்று சொந்த பொருளாதார முன்னேற்றம் இருக்கலாம், ஆனால் நாடு ஒருபோதும் முன்னேறாது என்று நான் உறுதியாக நம்புகிறேன். சமூக, அறிவு, கலாச்சார, மூலோபாய ரீதியாக நாடு எப்போதும் பின்தங்கிய நிலையிலேயே இருக்கும். அத்தகைய நாட்டின் ஒற்றுமையும் ஒருமைப்பாடும் எப்போதும் ஆபத்தில் இருக்கும்.

எந்த நாட்டில் தேவையில்லாத, சம்பந்தமில்லாத துறைகளின் ஆதிக்கம் வளர்ந்து கொண்டே போகிறதோ, அந்த நாடு நாளுக்கு நாள் நலிவடைந்து கொண்டே இருக்கும். நாட்டில் ஊழல்வாதிகள் மற்றும் தேசவிரோதிகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிக்கும். நேர்மையானவர்கள் ஓரங்கட்டப்படுவார்கள் மற்றும் தேசியவாதிகள் கடினமான வாழ்க்கை வாழ நிர்ப்பந்திக்கப்படுவார்கள்.

திறமையான, நேர்மையான, மனசாட்சியுள்ள, போர்க்குணமிக்க மற்றும் தேசப்பற்றுள்ள குடிமக்களாக இருக்கும் சமூக சேவகர்களை வளர்த்து மேம்படுத்துவதற்கான சூழலை நாம் உருவாக்க வேண்டும்.

***பின்வருவதை யார் எழுதியிருந்தாலும், இது ஒரு அற்புதமான கட்டுரை.***

**------------------------------------------------------------------------------------------------------------**

## <u>சட்டமும் நீதியும் சமானியனைத் தான் தண்டிக்குமா?</u>

***- சாவித்திரி கண்ணன்***

January 4, 2023

*இப்படியெல்லாம் கூட நடக்குமா? சட்டமும், நீதியும், ஆட்சி அதிகாரமும் செல்வாக்கான வர்களுக்கு சேவை செய்வதற்கான கருவிகளா? பணக்காரர்களின் மோசடிகளுக்கும், பித்தலாட்டத்திற்கும் தண்டனை என்பதே கிடையாதா? என நம்மை கொதிக்க வைக்கும் நிகழ்வுகளை கோர்வையாக பார்ப்போம்.*

இந்தியாவில் ஆட்சியாளர்களும், தொழிலதிபர்களுமாக சேர்ந்து அதிகமாக ஏமாற்றுவது விவசாயிகளைத் தான்! இயற்கையையும், தங்கள் உழைப்பையும் மட்டுமே சார்ந்து வாழ்ந்த விவசாயிகளை தங்கள் நோக்கத்திற்கு ஏற்ற பயிர்களை ‘சாகுபடி செய்யும்படி’ வலியுறுத்துவதும் இவர்கள் தான்! பின்பு கூட்டாக மோசடி செய்து ‘விவசாயிகளை சாகும்படி செய்பவர்களும்’ இவர்கள் தான்!

அதற்கு சரியான உதாரணம் கரும்பு விவசாயிகள்! முன்பெல்லாம் கரும்பு என்பது அதிக விவசாயிகள் பயிரிடும் பயிர் அல்ல! இனிப்பு பயன்பாட்டுக்கு நாம் அறுபதாண்டுகளுக்கு முன்பு வரையிலும் பனைவெல்லத்தைத் தான் பயன்படுத்தி வந்தோம். அது மிகவும் சுவையானது மட்டுமல்ல, மிக ஆரோக்கியமானதும் கூட! ஆனால், பனை வெல்லத்திற்கு மாற்றாக கரும்பில் இருந்து கிடைக்கும் சீனியை மக்கள் பயன்படுத்த அரசாங்கம் திட்டமிட்டது.

அதனால், கரும்பை பயிரிடச் சொல்லி அரசாங்கம் வற்புறுத்தியது! அப்படி பயிரிடும் கரும்பை பக்கத்தில் உள்ள சர்க்கரை ஆலையில் சேர்க்கும்படியும் அரசாங்கம் நிர்பந்தித்தது.

அப்படி உற்பத்தியாகும் சர்க்கரையை நியாய விலைக் கடைகள் மூலமாக கொடுத்து சர்க்கரையை பயன்படுத்தவும் மக்களை பழக்கப்படுத்தியது. பிறகு அரசு ஆலைகள், கூட்டுறவு ஆலைகள் தவிர்த்து தனியார் ஆலைகளையும் களத்தில் இறக்கியது! இதற்கு பின்னணியில் ஒரு முக்கியமான நோக்கம் இருந்தது! அது தான் கரும்பு சர்க்கரையில் இருந்து கிடைக்கும் மோலாசஸ்! சர்க்கரை ஆலைகள் கரும்பில் இருந்து கிடைக்கும் சர்க்கரைக்கான பணத்தை மட்டுமே விவசயிகளுக்கு தருகின்றன! அதன் சக்கையான மோலாசஸ் மூலமாக அபரிமிதமாக கிடைக்கும் பணத்தின் சிறுபகுதியை கூட விவசாயிகளுக்கு தருவதில்லை!





இந்த மோலாசசைக் கொண்டு தான் மது உற்பத்தியாளர்கள் அயல் நாட்டு வகை மதுவை தயாரிக்கிறார்கள்! மதுவைத் தயாரிப்பவர்கள் அரசியல்வாதிகள் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். அயல் நாட்டு மதுவை மக்கள் பழக வேண்டும் என்றால், அவர்கள் பனங் கள்ளை தடுக்க வேண்டும் என்பதால், கள்ளுக்கு தடையும் போட்டனர். இதனால், பல லட்சம் பனை விவசாயிகள் பாதிப்புக்கு உள்ளாயினர்.

தமிழகம் முழுக்க பல்லாயிரம் ஏக்கரில் கரும்பு பயிரிட விவசாயிகளுக்கு நெருக்கடி தரப்பட்டது. சர்க்கரை ஆலைகளும் செல்வாக்கானவர்களாலேயே தொடங்கப்பட்டது! இவர்களுக்கு அரசாங்கத்தின் அனைத்துவித அனுசரணைகளும் கிடைத்தன! அதனால், கரும்பை விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்தால் உடனே பணம் தரத் தேவையில்லை என்பது நடைமுறையானது. பின்பு சற்று காலம் தாழ்த்தலாம் என்பது நடைமுறையானது! பிறகு எவ்வளவு வேண்டுமானாலும் காலம் தாழ்த்தலாம் என்பதையும் அரசாங்கம் அனுமதித்தது. தற்போதோ கொள்முதல் செய்த கரும்புக்கு பணம் தராமல் மோசடி செய்வதும் தவறில்லை என்ற அளவுக்கு வந்து நிற்கிறது! அதைத் தான் ஆரூரான் சர்க்கரை ஆலையின் அசகாய மோசடிகள் நம் நெற்றிப் பொட்டில் அறைந்தது போல உணர்த்துகின்றன!

ஆரூரான் சர்க்கரை ஆலைகள் தஞ்சை மாவட்டத்திலும், கடலூர் மாவட்டத்திலுமாக நான்கு உள்ளன! இவற்றுக்கு சுமார் 25,000 க்கும் மேற்பட்ட விவசாயிகள் கரும்பு விநியோகம் செய்து வந்தனர். இந்த விவசாயிகளுக்கு 2016 முதல் கரும்புக்கான பல கோடித் தொகையைத் தராமல் இழுத்தடித்தது இந்த நிர்வாகம். இத்துடன் தீடீரென்று உங்க பாக்கியைத் தருகிறோம். இந்த பாரத்தில் கையெழுத்து போட்டுத் தாங்க எனக் கேட்டு தஞ்சை மாவட்ட விவசாயிகள் சார்பில் 360 கோடியும் கடலூர் மாவட்ட விவசாயிகள் சார்பில் 90 கோடியும் அவர்களுக்கே தெரியாமல் அவர்களின் பெயரில் வங்கியில் கடன் வாங்கியுள்ளது இந்த நிர்வாகம். இந்த மோசடிக்கு வங்கி அதிகாரிகளும் துணை போய் உள்ளனர்! இந்த கடனுக்கு வட்டியையும், அசலையும் சேர்த்துக் கட்டும்படி விவசாயிகளுக்கு நெருக்கடி தந்து கொண்டுள்ளது வங்கி நிர்வாகம்!

திருமண்டகுடி ஆரூரான் சர்க்கரை ஆலை, சித்தூர் ஆரூரான் சர்க்கரை ஆலை ஆகிய இரண்டு ஆலைக ளின் பெயரில் அந்நிர்வாகம் வங்கிகளில் ரூ.1454.58 கோடி கடன் வாங்கியிருந்த இந்த ஆலை, கடந்த சில ஆண்டுகளாக செயல்படாமல் தன் செயல்பாடுகளை நிறுத்தி வைத்து திவாகிவிட்டதாக அறிவித்துவிட்டது.

இந்த ஆலைக்குச் சொந்தமான சொத்துக்கள் சுமார் ஆயிரம் கோடிக்கு நிலமாகவும், தொழிற்சாலையாகவும் உள்ள நிலையில் அதைக் கைப்பற்றி வங்கிக் கடனையும், விவசாயிகளுக்கான கடனையும் அடைப்பது தானே ஒரு அரசாங்கம் செய்ய வேண்டிய வேலை. அப்படித் தானே நீதிமன்றமும் தீர்ப்பளித்து வழிகாட்டி இருக்க வேண்டும். ஆனால், நடந்தவை எல்லாம் பார்த்தால், நாம் சட்டத்தின் அடிப்படையில் செயல்படுவதாக நம்பப்படும் ஜனநாயக நாட்டில் தான் வாழ்கிறோமா என்ற சந்தேகம் தான் வருகிறது.

பாதிக்கப்பட்ட விவசாயிகள் காவல்துறைக்கும், கலெக்டருக்கும், முதல்வருக்கும் பல புகார் கடிதங்களை அனுப்பினர்! பல கட்டப் போராட்டங்களை நடத்தினர். அன்றைய முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமியை சந்தித்தும் முறையிட்டனர். நியாயப்படி மோசடி செய்த தனியார் சர்க்கரை ஆலை மீது கடும் நடவடிக்கை எடுத்து , மோசடிப் புகாரில் அவர்களை சிறைக்குள் தள்ளி இருக்க வேண்டும். அவர்களின் சொத்துக்களை பறிமுதல் செய்து விவசாயிகளுக்கும், வங்கிகளுக்கும் தர வேண்டிய கடன் தொகையை தந்திருக்க வேண்டும்.

**அதிரடி கட்டப் பஞ்சாயத்து;**

ஆனால். இவை எதுவுமே நடக்கவில்லை.ஏதோ மறைமுக ஒப்பந்தம் நடந்தததோ என்னவோ..? எடப்பாடி அரசு ஆரூரான் ஆலைகள் தேசிய கம்பெனிச் சட்டங்கள் தீர்ப்பாயத்தில் முறையிட அன்று அதிமுக அரசு அனுமதித்துவிட்டது. இந்த தீர்ப்பாயம் என்பது ஒரு மனசாட்சியில்லாத கட்டப் பஞ்சாயத்து அமைப்பாக செயல்பட்டு வருகிறது என்பதற்கு இந்த விவகாரத்தில் நடந்தவற்றைக் கொண்டு யாருமே எளிதில் உணரலாம்!

ஆரூரான் சர்க்கரை ஆலை வங்கிகளுக்கு தர வேண்டிய 1,454.58 கோடி கடனில் 85 கோடி ரூபாயை மட்டும் கொடுத்தால் போதும். அதையும் ஐந்து ஆண்டு களில் ஏழு தவணைகளாக செலுத்தினால் போதும் என, தேசிய கம்பெனிச் சட்டங்கள் தீர்ப்பாயம் தீர்ப்பளித்தது! இந்த வகையில் வாங்கிய வங்கிக் கடன்களில் 1369.58 கோடி ரூபாயை தள்ளுபடி செய்துவிட்டது! ஏன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்பதற்கு எந்த விளக்கமும் இல்லை! இந்த ஆலை முதலாளிகள் இது வரை சம்பாத்தித்து சேர்த்த பல நூறு கோடிகள் என்னவாயிற்று? அவர்களின் பல சொத்துக்களை ஏன் பறிமுதல் செய்யவில்லை, போன்ற எந்தக் கேள்விக்கும் விடை இல்லை.

இது போன்ற சூழல்களில், ‘விவசாயிகளுக்கு முன்னுரிமை கொடுத்து, அவர்களுக்கு சேர வேண்டிய பணத்தை விவசாயிகளுக்கு வழங்க வேண்டும்’ என்று நீதிமன்றம் ஏற்கனவே கூறிய போதும், ‘விவசாயிகளின் கரும்பு பண பாக்கி முழுவதையும் தர வேண்டியதில்லை 45 கோடி ரூபாயை ஓராண்டில் ஐந்து தவணைகளில் கொடுத்தால் போதும்’ என்று தீர்ப்பாயம் கட்ட பஞ்சாயத்து செய்துள்ளது.

மேலும், விவசாயிகள் வயிற்றில் மட்டும் அடிக்கவில்லை! கரும்பு ஏற்றி வந்த வாகனங்களுக்கு தர வேண்டிய வாடகை பாக்கி ரூ.47.61 லட்சத்தில் 48 ஆயிரம் மட்டும் தந்தால் போதும் என்றும் கூறியுள்ளது. தொழிலாளர்கள், ஊழியர்கள் சம்பள பாக்கியில் 18.74 கோடி ரூபாயை தள்ளுபடி செய்துவிட்டு, 3.71 கோடி ரூபாயை மட்டுமே கொடுத்தால் போதும் எனக் கூறியுள்ளது!

‘விவசாயிகளுக்குத் தர வேண்டிய கரும்பு பண பாக்கிக்கு 15 சதவீதம் வட்டியுடன் வழங்கிட வேண்டும்’ என்று கரும்பு கட்டுப்பாடு சட்டம் உள்ள நிலையில் கொடுக்க வேண்டிய பணத்தைக் கூட முழுமையாக தராமல், அதிலும் மோசடியை அரங்கேற்றி உள்ளது, தேசிய கம்பெனி சட்டங்கள் தீர்ப்பாயம்! இது உண்மையில் சட்டப் பஞ்சாயத்து தீர்ப்பாயமாகத் தெரியவில்லை. கட்டப் பஞ்சாயத்து தீர்ப்பாயமாகத் தான் தெரிகிறது.

**திமுக ஆட்சியில் இன்னும் மோசடி!**

தேர்தல் நேரத்தில் அரூரான் சர்க்கரை ஆலை மீது நடவடிக்கை எடுத்து விவசாயிகளின் கடன்பாக்கி தீர்த்து வைக்கப்படும் என திமுக தலைவர் ஸ்டாலின் வாக்குறுதி அளித்தார்! ஆனால், 18 மாதங்கள் கடந்துவிட்ட நிலையில் எதுவுமே நடக்கவில்லை என்பது மட்டுமல்ல, இருக்கும் சூழல்களை பயன்படுத்தி ஆட்சியாளர்கள் ஆதாயம் பார்த்து வருவதாகத் தான் தெரிகிறது!

**அடிமாட்டு ரேட்டுக்கு ஏலம்;**

விவசாயிகளுக்கு கரும்பு பாக்கி தீர்க்கப்படாத நிலையில் ஆரூரான் சர்க்கரை ஆலைகளுக்கு சொந்தமாக 750 ஏக்கர் நிலம், இரண்டு பெரிய சர்க்கரை ஆலைகள், டிஸ்டிலெரி நிறுவனங்கள், மின்சாரம் உற்பத்திக்கான இணைமின் நிலையங்கள் கொண்ட ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் உள்ள நிலையில், வெறும் 145 கோடி ரூபாய்க்கு இந்த ஆலை ஏலத்திற்கு தரப்பட்டு உள்ளதானது ஒரு பெரும் மர்மமாக உள்ளது! அப்படி ஏலம் எடுத்தது முதலமைச்சர் குடும்ப உறுப்பினர் ஒருவரின் பினாமி நிறுவனமாகப் பார்க்கப்படும் கால்ஸ் டிஸ்லரிஸ் பிரைவேட் லிமிடெட் என்கிறார்கள்!

கோடிக் கோடியாக மதுபான உற்பத்தியில் சம்பாதிக்கும் இந்த மதுபான ஆலைகள் அதற்கு முக்கிய மூலப் பொருள்களில் ஒன்றான மோலாசஸ் தரும் விவசாயிகளுக்கு எதுவுமே தராமல் ஏமாற்றுவதற்கு என்று தான் முற்றுபுள்ளி வைக்கபடுமோ?

**காந்தி தேசத்தில் விவசாயிகள், தொழிலாளிகளின் கழுத்து நெரிக்கப்பட்டுக் கொண்டுள்ளது என்பதே உண்மை!**

சாவித்திரி கண்ணன்

அறம் இணைய இதழ்

---

# ஊழலற்ற தேசம்

**பேராசிரியர்.க.பூரணச்சந்திரன்**

“நாட்டில் எங்கும் ஊழல் மலிந்திருக்கிறது” என்று எல்லாரும் பேசுகிறார்கள். சர்வதேச அறிக்கை ஒன்று ஊழல்மிக்க நாடுகளில் நமதுநாடு கடைசியிலிருந்து மூன்றாம் இடத்தில் இருக்கிறது என்று தெரிவிக்கிறது. அடிக்கடி நமது பேச்சிலும் எழுத்திலும் இடம் பெறும் இச்சொல்லின் பொருள் என்ன?

**ஊழல்-அர்த்தம்:**

சமூக ஒழுங்கிற்கு மாறாக நடத்தல், பிறரை ஏமாற்றுதல், வஞ்சித்தல், பொதுமக்களுக்குரிய பொருளைச் சட்டத்திற்குப் புறம்பான வழிகளில் கவர்தல் அல்லது கொள்ளையடித்தல் என்று இச்சொல்லுக்குப் பொருள் கூறலாம்.
தனிமனித ஒழுக்கம், சமூக ஒழுக்கம் என ஒழுக்கம் இரு வகைப்படும். ஒருவனது தனிமனித வாழ்க்கையை பாதிக்கும் விதமான செயல்களில் ஈடுபடும் போது அவன் தனிமனித ஒழுக்கத்தை மீறுகிறான். உதாரணமாகக் குடிப்பழக்கம், போதை மருந்துப்பழக்கம் போன்றவை ஒருவனை பாதிக்கின்றன. அப்பழக்கங்களில் ஈடுபடுகின்றவனைத் தனிமனித விதிகளை மீறுபவன் என்று சொல்லலாம். தனிமனித விதிகளை அல்லது ஒழுங்குகளை மீறுவது என்பது அப்படி மீறுபவனையும் அவனது குடும்பத்தையும் மட்டுமே பாதிக்கிறது. சமூக ஒழுக்கம் என்பது இன்னொரு வகை. அதன் விதிகளை மீறுவது பொதுமக்களின் பெரும்பகுதியினரை பாதிக்கிறது. உதாரணமாகப் பொது இடங்களைத் தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும் என்பது சமூக ஒழுக்கம். இதை மீறுபவர்கள் சமூகத்தில் நோய் பரவுவதற்கும் மற்றவர்கள் பாதிக்கப்படுவதற்கும் காரணமாகிறார்கள். தனிமனித ஒழுக்கத்தை மீறுவதைவிட இது மிகவும் மோசமானது.

ஊழல் என்பது சமூக ஒழுக்கத்தை மீறுகின்ற மிக மோசமான விஷயம். ஒரு நாட்டிற்குரிய அலுவலர்கள் எவராயினும் அந்நாட்டு மக்களுக்கு நன்மை தருகின்ற முறையில் நடந்துகொள்ள வேண்டும். அதனை மீறித் தங்கள் சுயநலத்தை மட்டுமே கருதி நாட்டு மக்களுக்குத் தீமை செய்யும் காரியங்களில் இறங்கும் போது ஊழல் செய்கிறார்கள். ஊழல் நடத்தை என்பது ஒரு மனப்பான்மை.

ஊழல் என்பது தனிமனித ஒழுக்கத்திற்கும் மாறானது. நேர்மை என்பது அடிப்படை மனித ஒழுக்கம். அடிப்படை மனித ஒழுக்கங்கள் மாறாதவை. உதாரணமாக, பிறரைக் கொள்ளையடிப்பவனும் தன்னைப் பிறர் கொள்ளையடிப்பதை விரும்புவதில்லை. பிறருக்குத் தீங்கு செய்பவனும், தனக்குப் பிறர் தீங்கு செய்வதை விரும்புவதில்லை. பிறன் மனைவியைச் சொந்தம்கொண்டாட முனைபவனும் தன்மனைவியைப் பிறர் காணச் சகிப்பதில்லை. மனித ஒழுக்கத்திற்குத் “தன்னைப் போலவே பிறரை நினைக்கவேண்டும்” என்பது அடிப்படையாக அமைகிறது. அடிப்படை மனித ஒழுக்கத்திற்கு மாறாக நடக்கும் போதுதான் ஊழல் ஏற்படுகிறது.

**ஊழல் ஒரு மனப்பான்மை:**

ஊழல் ஒரு மனப்பான்மை, அதைவிட ஒரு மனநோய் என்று கூடச் சொல்லலாம். பலபேர் ஊழல் என்றால், ஏதோ பணத்தைத் திருடுவது, பொதுச் சொத்தைக் கையாடுவது என்று மட்டும் நினைக்கிறார்கள். அவ்வாறல்ல. ஓர் இடத்தில் ஏதோ ஒரு காரணத்திற்காக வரிசையில் நிற்கிறோம். பின்னால் வரும் ஒருவன் வந்து முறையற்ற விதத்தில் முன்னால்போய் நின்று கொள்கிறான். இதுவும் ஊழல்தான்.

பஸ்ஸில் ஏற நெரிசலாக இருக்கிறது. சிலர் நடத்துநரைக் கேட்டுச் சீட்டு வாங்கிக்கொண்டு ஏறுகிறார்கள். சிலர் வெளியிலிருந்தபடியே துண்டையோ பையையோ உள்ளே எறிந்து ‘இடம் போட்டு’ விட்டுப் பின்னால் ஏறி, ஆனால் “நாங்கள் ரிசர்வ் செய்து

விட்டோம்” என்று சொல்லி உட்கார்ந்து கொள்கிறார்கள். இதுவும் ஊழல்தான். இவை எல்லாமே சமூக ஒழுக்கத்தை மீறும் சுயநல நடவடிக்கைகள்.

அரசு அலுவலகத்தில் ஒருவன் முறைப்படி ஒரு காரியத்திற்காகச் செல்கிறான். இன்னொருவனுக்கு அவசரம். அவன் செல் வாக்கு உள்ளவனும் கூட. தனது காரியமே முதலில் ஆகவேண்டும் என்று நினைக்கிறான். உடனே தனது பணத்தைப் பயன்படுத்தி, அரசு அலுவலகருக்கு லஞ்சம் கொடுத்து, தனது சுயநலக் காரியத்தை முடித்துக்கொள்கிறான். முறையான வழியில் வருபவனுக்குக் காரியம் ஆகாமல் போகிறது. இதற்கும் முன்பு கூறியது போல வரிசையில் முறையற்ற வழியில் நுழைந்ததற்கும் வித்தியாசமில்லை. அங்கு உடல் பலம், இங்கே பணபலம். அவ்வளவுதான். நாம் முன்னதைக் குறை சொல்வதில்லை. பின்னதை மட்டும் ஊழல் என்கிறோம்.

ஊழல் என்பது சமூகத்தில் காணப்படும் ஒரு சுயநல மனப்பான்மை. ஒரு மனநோய். அது ஏதோ அரசாங்க அலுவலகங்களில், அரசாங்க ஊழியரிடம் அல்லது அரசியல்வாதிகளிடம் மட்டும் காணப்படும் பண்பு அல்ல.

**தகுதிக்கேற்பப் பெறுகிறோம்:**

மோசமான அரசாங்கம் அமைந்துவிடுகிறது. “உனக்கு எது பொருத்தமோ (ஏற்றதோ) அதை நீ பெறுகிறாய்” என்று ஒரு பழமொழி இருக்கிறது. (You get what you deserve). இது மிகவும் சரியான கூற்றே. பெரும்பான்மை மக்கள் ஊழல் மனப்பான்மை கொண்டவர்களாக இருக்கும்போது அவர்களை ஆட்சிசெய்பவர்களும் வேறு எப்படி இருப்பார்கள்? அவர்களும் ஊழல் செய்பவர்களாகத் தானே இருக்கமுடியும்?

சிலஆண்டுகளுக்கு முன்னால் அரசாங்க அலுவலர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். அது மோசமான விதத்தில் ஒடுக்கப்பட்டது. பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தார்கள். “இந்த அரசு அலுவலர்களுக்கு நன்றாக வேண்டும். ஊழல் செய்பவர்களுக்கு தங்கள் கடமையைச் செய்யாதவர்களுக்கு ஏற்ற தண்டனைதான் இது” என்று சொன்னார்கள். இந்த தண்டனை சரியா தவறா என்பது ஒருபுறம் இருக்கட்டும். இப்படிப்பட்ட அரசு அலுவலர்களை உருவாக்கியது யார்? நாம்தானே? அதாவது பொதுமக்கள்தானே?

உதாரணமாக, ஒரு பையன் பிறந்து வளரும்போதே அவன் ஊழல் செய்தாவது நன்றாகச் சம்பாதிக்க வேண்டும் என்ற மனப்பான்மையைப் பொது மக்கள்தான் ஏற்படுத்துகிறார்கள். நேர்மையாக நடப்பவர்கள் ஏமாளிகள், எதற்கும் லாயக்கற்றவர்கள், பைத்தியக்காரர்கள் என்கிறார்கள். ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்கும்போதே மாப்பிள்ளை சம்பளம் குறைவாக வாங்கினாலும், நன்றாக மற்றவழியில் சம்பாதித்துவிடுவான் என்று சந்தோஷப்பட்டுக் கொண்டு கொடுக்கிறார்கள். இப்படியெல்லாம் பொதுமக்களே, சாதாரண மக்களே, (அதாவது நாமே) எல்லா விதங்களிலும் ஊழலை ஆதரித்துக்கொண்டு, அதை ஏற்றுக் கொண்டு, அதைச் செய்யும் ஒருவனுக்கு தண்டனை கிடைத்தால் சந்தோஷப்படுகிறார்கள். இது எந்தவிதத்தில் நியாயம்?

“நான் ஊழல் செய்யவும் இல்லை, அதை ஏற்றுக்கொள்ளவும் இல்லை; அப்படியிருக்க நான் எப்படி ஊழலுக்குத் துணை செய்வதாகக் கூறலாம்?” என்று சிலர் கேட்கிறார்கள். நாம் நம் கண்ணெதிரில் ஊழல் நடக்கும்போது தடுக்கவோ தண்டிக்கவோ முனைவதில்லை. பல சமயங்களில் பயப்படுகிறோம். அப்படியானால், நாம் எல்லாரும் ஊழலுக்குத் துணை செய்பவர்கள் என்று தான் அர்த்தம்.

ஊழல் சிறிய அளவிலிருந்துதான் தொடங்குகிறது. உதாரணமாக, ஒரு பத்திரப்பதிவு அலுவலகத்திற்குச் செல்லுங்கள், பதிவுக்கான கட்டணத்துடன் அங்குள்ள பதிவாளரிலிருந்து பியூன் வரை அனைவருக்குமான பங்கையும் சேர்த்தே உங்களிடம் முதலிலேயே வாங்கிவிடுவார்கள். பலபேருக்கு இப்படி நடக்கிறது என்று கூடத் தெரியாது. என்ன நடக்கிறதென்று தெரியாதவர்களும், தெரிந்தே ஏற்றுக்கொள்பவர்களும் ஒன்றுதான். இப்படி ஒரு தேசத்திலிருக்கும் மிகப் பெரும்பான்மை மக்கள் ஊழல் மனப்பான்மை கொண்டவர்களாக, “என்ன நடந்தால் நமக்கென்ன” என்று இருப்பவர்களாகவோ, தடுக்கச் சக்தியற்றவர்களாகவோ இருக்கும்போது அவர்களுக்கேற்ற ஊழல் ஆட்சியாளர்களும் அலுவலர்களும் அரசியல்வாதிகளும் தானே இருப்பார்கள்? பொது மக்களிலிருந்துதானே இவர்கள் எல்லாரும் உருவாகிறார்கள்?

**ஊழலற்ற தேசம்:**

ஆகவே ஊழலற்ற தேசம் வேண்டுமானால், பொதுமக்களின் மனப்பான்மை மாறவேண்டும். அதுதான் அடிப்படை. பொதுமக்களின் மனம் ஊழலுக்கு எதிரானதாக, ஊழலை ஏற்றுக்கொள்ளாததாக இருந்தால் ஊழல் புரிபவர்கள் அரசு அலுவலுக்கும் வரமாட்டார்கள், அரசியல்வாதிகளாகவும் மாட்டார்கள். எனவே ஊழலற்ற தேசம் வேண்டும் என்பவர்கள் பொதுமக்களின் மனப்பான்மையை மாற்றுவதற்கு என்ன செய்வது என்பது பற்றித்தான் ஆராய வேண்டும்.

**இன்றைய நிலை:**

ஊழல் மனப்பான்மை என்பது “எந்தவிதத்திலேனும் நான் மட்டும் பயனடைய வேண்டும், மற்றவர்கள் எக்கேடும் கெடட்டும்” என்னும் சுயநல மனப்பான்மைதான். ஊழல் மனப்பான்மை மாறுவது எப்படி? நேர்மையான விதத்தில் நடந்தாலே நமக்குத் தேவையானது எதுவாயினும், ரேஷன் பொருளானாலும், இட ஒதுக்கீடானாலும், வேலை வாய்ப்பானாலும், டிரைவிங் லைசென்ஸ் ஆனாலும் கிடைத்துவிடும் என்ற நிலை இருந்தால் மக்கள் நியாயத்திற்குப் புறம்பான வழிகளைப் பெரும்பாலும் நாடமாட்டார்கள். நேர்மையாகவே எல்லாம் கிடைக்கும் என்றால் அநியாய வழிக்கு ஏன் போக வேண்டும்?

ஆகவே மக்கள் நியாயமான வழியில் நடந்தாலே அவர்களுக்கு உரிய காரியங்கள் நடக்கும் என்ற நம்பிக்கையை அரசாங்கம்தான் ஏற்படுத்தவேண்டும். ஆனால் அரசாங்கம் அப்படிச் செய்யுமா? அரசாங்கமே ஊழல் மிகுந்ததாக இருக்கும்போது நேர்மையான விதத்தில் நடப்பது நன்மை பயக்கும் என்ற உறுதியை, நம்பிக்கையை அது எப்படி அளிக்கமுடியும்? (இதனால்தான் போலும், அரசன் எவ்வழி, குடிகள் அவ்வழி என்று பழமொழி இருக்கிறது.)

ஊழல் கூடாது என்று பிரச்சாரம் செய்வதன் வாயிலாக ஊழலை ஒழிக்க முடியாது. சிறிய குழந்தைகளுக்கே இந்தக் காலத்தில் யார் வெறுமனே சொல்கிறார்கள், யார் நடந்து காட்டுகிறார்கள் என்பது நன்றாகப் புரிகிறது. அரசாங்க அலுவலர்களும், அரசியல்வாதிகளும், செல்வாக்கு மிக்கவர்களும், குறிப்பாக ஊழல் உருவாகப் பெரும் காரணமாக இருக்கின்ற முதலாளிகளும் ஊழலற்ற விதத்தில் பெரும்பான்மையும் நடந்துகாட்டுவது வாயிலாகத்தான் ஊழலை ஒழிக்க முடியும். தாங்களே ஊழல் செய்து பல்லாயிரக் கோடிகள் கணக்கில் பணம் சம்பாதித்துக்கொண்டு மக்கள் ஊழல் செய்யக்கூடாது என்று சொல்லும் அரசியல்வாதிகளையும் அதிகாரிகளையும் யார் நம்புவார்கள்?

நமது அரசாட்சிமுறை ஊழலுக்கு இடமளிப்பதாகவே இருக்கிறது. உதாரணமாகத் தேர்தல். தேர்தலுக்கு நிற்பவர்கள், ஏராளமாகப் பணம் செலவு செய்யவேண்டி இருக்கிறது. நேர்மையானவர்கள் எப்படி இலட்சக்கணக்கில், கோடிக்கணக்கில் தங்கள் தொகுதியில் வெற்றிபெறப் பணம் செலவழிக்க முடியும்? ஆகவே நேர்மையற்ற முறையில் பணம் சம்பாதிப்பவர்கள்-அந்தப் பணம் எப்படிப் போனாலும் சரி, கருப்புப் பணம் வெள்ளையாகட்டும் என்னும் மனப்பான்மை உள்ளவர்கள்தான் தேர்தலில் நிற்க முடியும். ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையே ஊழலை ஆதரிக்கும்விதமாக இருக்கும்போது அவர்கள் ஊழலை எப்படி ஒழிப்பார்கள்?

தேர்தல் செலவுகளுக்காகக் கட்சிகளுக்குப் பணம் வேண்டும். கட்சிகள் பெரிய முதலாளிகளை நாடுகின்றன. முதலாளிகள் கட்சிகளுக்குத் தேர்தல் நன்கொடை (நிதி) தருகிறார்கள். தேர்தலில் அக்கட்சி வெற்றிபெற்ற பிறகு அவர்கள் தங்களுக்குச் சலுகைகள் கேட்கிறார்கள். அரசுப்பொறுப்பை ஏற்ற கட்சிகள் அப்போது மறுக்க முடிவதில்லை. சட்டத்திற்குப் புறம்பாகச் சலுகைகளை அந்த முதலாளிகளுக்குத் தருகிறார்கள். இப்படி அதிகாரமும் முதலாளித்துவமும் இணைந்து ஊழலை உருவாக்கிக் கொண்டிருக்கின்றன. இப்போது சர்வதேச நாடுகளும் அடுத்த நாடுகளில் அரசியல் மாற்றங்களை ஏற்படுத்த ஊழலைப் பயன்படுத்துகின்றன.

இதையெல்லாம் பார்க்கும்போது, நேர்மையாக இருக்கின்ற, நேர்மை மனப்பான்மை படைத்த ஒருசிலருக்கும் சமூகத்தின்மீது அவநம்பிக்கைதான் தோன்றுகிறது. ஊழலுக்கு ஆதரவாகவே அரசியல்வாதிகளும், அரசாங்கமும், தேர்தல் முறையும், பெரிய அமைப்புகளும், இப்படி எல்லாமே செயல்படும்போது சாதாரண மனிதன் என்ன செய்வது? இந்த அமைப்புகளுக்கு எதிராக எப்படிப் போராடுவது என்னும் சோர்வு ஏற்படுகிறது. இன்று நாம் படித்தவர்களிடமும் பண்புள்ளவர்களிடமும் காண்பது இப்படிப்பட்ட சோர்வுதான்.

**விஷச்சுழல்**

ஊழல் என்பது மிகப்பெரிய விஷச்சுழல். ஏனென்றால் பணபலமுள்ளவன் ஊழல் செய்து அரசாங்கத்தில் செல்வாக்குப் பெற, அரசாங்கம் (தனது தேர்தல் போன்ற விஷயங்களுக்காக) மறுபடியும் அவனை ஆதரிக்க, இப்படி அந்தச்சுழல் விரிந்துகொண்டே போகிறது. இதிலிருந்து தப்பிப்பது எப்படி?

ஊழல் செய்யும் அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் தாங்கள் அதைச் செய்யும்போது கண்டுகொள்வதில்லை. பிறர் செய்து, நாட்டுக்கு அது மோசமான விளைவை ஏற்படுத்தும் என்னும்போது மட்டும் உச்சநீதி மன்றம், சிபிஐ விசாரணை அது இது என்று கண்துடைப்பு விவகாரங்களில் ஈடுபடுகிறார்கள். ஒரு காலத்தில் ஏதாவது ஊழல் நடந்தால் விசாரணைக் கமிஷன் அமைப்பார்கள். இப்போது விசாரணைக் கமிஷன் என்றாலே கேலிக்கூத்தாகி விட்டது. யாருக்கும் அதில் நம்பிக்கை இல்லை. விசாரணைக் கமிஷன்களால் ஒருவரும் தண்டிக்கப்பட்டதில்லை. மாறாக, இது ஒரு ஒத்திப்போடும் உத்தி; மக்களை மறக்கச்செய்யும் உத்தி என்று எல்லாருக்கும் தெரியும்.

**வழிதான் என்ன?**

இப்படிப்பட்ட மிகச்சோர்வான நிலையில் பொதுமக்கள் என்ன செய்வது? மாணவர்களும் இளைஞர்களும் எப்படி ஒரு ஊழலற்ற தேசத்தை உருவாக்குவார்கள்? ஆர்வமுள்ளவர்கள் சிலஆயிரம் பேரேனும் ஓர் அமைப்பாகச் சேர்ந்து செயல்படுவது ஒரு வழி. உதாரணமாக, ஓர் அரசு அலுவலர் ஊழலில் ஈடுபடுகிறார் என்றால் தனிமனிதன் சென்று நியாயம் கேட்டால் வேலை நடப்பதில்லை. மேலும் அவனை ஒழிக்க முனைந்துவிடுவார்கள். நியாய மனப்பான்மை உள்ள பத்துப்பேர் ஒன்றாகச் சேர்ந்து கேட்டால் நியாயம் கிடைக்கலாம். ஆனால் அதற்கும் தளராத மன உறுதி உள்ள தனிமனிதர்கள் வேண்டும். அந்தப் பத்துப்பேரும் எல்லா ஊர்களுக்கும் செல்லமுடியாது. எனவே ஓர் இயக்கத்தையே உருவாக்கும் உறுதி படைத்த மனிதர்கள் வேண்டும். அதற்கும் தளராத மனமும் பணபலமும் வேண்டும். இல்லை யென்றால், தற்காலிகமாகத் திரளும் மனிதக்குழுவையும் இன்று “தீவிரவாதிகள்” என்று பெயர்சூட்டியே அரசியல்வாதிகள் ஒழித்து விடுவார்கள். எல்லா பலமும் அவர்கள் கையில்!.

ஊழல் என்பது சுயநலம். பொதுநலத்தில் குறுக்கிடாதவரை, சுயநலத்தினால் தவறில்லை. உன் கண்ணைக் குத்தாதவரை நான் குடை வைத்துக் கொள்வதில் தவறில்லை. பொதுநலத்திற்கு மாறான சுயநலம் தீமை பயக்கக்கூடியது. இறுதியாக நாட்டையே (நாட்டையே என்றால் நம் அனைவரையுமே என்றுதான் அர்த்தம்) ஒழித்துவிடும், சீரழித்துவிடும், அடிமையாக்கிவிடும். இதை மக்கள் உணருமாறு செய்யவேண்டும். யார் செய்வது?

இயற்கை இதற்கு எவ்வெவ்வாறோ உதவி செய்கிறது. உதாரணமாக, நிலத்தையும், காற்றையும், நீரையும் மாசுபடுத்தியேனும் தங்களுக்கு ஆயிரமாயிரம் கோடிகள் சேர்த்துக்கொண்டால் போதும் என்று முதலாளிகள் நம்பினார்கள். ஆனால் சுற்றுச்சூழல் மாசுபாட்டினால் ஏற்படும் இயற்கை மாற்றங்கள் பொது மக்களை ஓரளவு விழிப்படைய வைத்திருக்கின்றன. (ஓரளவுதான்!) இப்போது சுற்றுச்சூழல் மாசுபாட்டிற்கு எதிராக மக்கள் திரளுகிறார்கள். எனவே இயற்கை நமக்கு உதவிசெய்யும் என்று மக்கள் நம்பவேண்டும்.

ஊழலுக்கு எதிரான மனப்பான்மை கொண்டவர்கள், தற்காலிகமாக ஆங்காங்கு ஒன்றுதிரண்டு போராடினால் போதாது, “ஊழலால் கிடைப்பது தற்காலிகத் தீர்வுதானே ஒழிய நிரந்தரத் தீர்வு அல்ல” என்பதை உணருமாறு செய்யவேண்டும். பண்புள்ளவர்கள் சிலரின் தியாகத்தினால்தான் பெரிய காரியங்கள் நிகழுகின்றன. அவர்கள்தான் ஊழலுக்கு எதிரான இயக்கங்களை உருவாக்க வேண்டும். அவற்றை முன்னெடுத்துச் செல்லவேண்டும். தங்கள் நோக்கம் தீவிரவாதமோ அரசியலோ கிடையாது என்பதை மக்களுக்குத் தெளிவுபடுத்தி, மக்களுக்கு நன்மை கிடைப்பதே தங்கள் நோக்கம் என்பதை வலியுறுத்தி, இயக்கங்களை உருவாக்க வேண்டும்.

நமது அரசியலமைப்பையும், தேர்தல்முறையையும், பிற தேர்ந்தெடுப்பு முறைகளையும், மக்களுக்கு எதிரான சட்டங்களையும் நீதிமுறையையும் மாற்றமுடியாமல் போனால், பொதுமக்கள் மிகப்பெரிய அளவில் ஒன்றுதிரளும் இயக்கங்கள் மட்டுமே எதிர் காலத்தில் நம்பிக்கைதரும் ஒரேவழி. ஊழலற்ற தேசத்தை உருவாக்கும் ஒரே வழி. அம்மாதிரி இயக்கங்களை உருவாக்க ஒன்று திரளுவோம், உண்மையிலேயே சிறந்த (வல்லரசாக அல்ல, அது மேலும் ஊழலில் கொண்டுபோய்விடும்), மனிதத்தன்மை மிக்க இந்தியாவை உருவாக்க!.

(குறிப்பு: இந்தக்கட்டுரை, ஏறத்தாழப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னால் எழுதப்பட்டது. அன்னா ஹசாரே முதலியவர்கள் உருவாவதற்கு முன்னால், இந்தியாவிலிருக்கும் பல முதலமைச்சர்கள், கேபினட் அமைச்சர்களே சந்திசிரிப்பதற்கு முன்னால். இன்றும் ஏற்புடையதாக இதன் கருத்துகள் உள்ளன என்பதால் வெளியிடப்படுகிறது.)

ஆனால், உனக்கு எது ஏற்றதோ அதை நீ பெறுகிறாய் என்று ஊழல் சமுதாயத்திடம் நேர்மையானவர்கள் அல்லது நல்லவர்கள் சொல்லிவிட்டுப் பேசாமல் செல்லும்போது தங்கள் பொறுப்பிலிருந்து நழுவுகிறார்கள். அதாவது ஊழலற்ற சமுதாயத்தை உருவாக்குவதற்கு அவர்களுக்கும் ஒரு பொறுப்பு உண்டு. வெறும் விமர்சனம் மட்டும் போதாது.

**நேர்மை நெறியில் குறைந்த செலவில் விளம்பரம் செய்து பயன் பெருவீர்!**

**விளம்பரக்கட்டண விவரம்**

**முழுப்பக்கம் ரூ 2000/-; அரைப்பக்கம் ரூ 1000/-; கால் பக்கம் ரூ 500/-.**

**இதழில் வருகின்ற கட்டுரைகள், விளம்பரங்கள் படைப்பாளியையே சார்ந்தது**
**நேர்மை நெறி நிர்வாகிகளோ , ஆசிரியரோ பொறுப்பல்ல**

## செயற்குழுக் கூட்டம் (15-02-2023)

இன்று நமது இயக்கத் தலைவர் தலைமையில் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் உபதலைவரும் பொது செயலாளரும் நான்கு செயற்குழு உறுப்பினர்களும், கலந்து கொண்டனர். கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. இயக்கத்தின் 2023ம்ஆண்டு ஜனவரி மாத வரவு செலவு கணக்கு வாசிக்கப்பட்டது. வரவு செலவு கணக்கு சரிதானன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2. ஒரு லட்சம் ரூபாய் வைப்பு நிதி (FIXED DEPOSIT) வைக்கத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கணக்கில் உள்ள தொகையை வைப்பு நிதியாக மாற்றினால் வட்டி வருமானம் அதிகம் கிடைக்கும்.

3. திரு ரவிக்குமார் என்பவர் நமது இயக்கத்தில் ஆண்டு உறுப்பினராக விண்ணப்பித்துள்ளார். அவ்விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஆண்டு உறுப்பினராகிறார்.

4. தற்பொதைய தலைவர் திரு ந. சுப்ரமனியம் அவர்கள் தலைவர் பதவியிலிருந்து ராஜினாமா செய்து அளித்த கடிதத்தை ஏற்றுக்கொண்டது. அவரது ராஜினாமா உடனடியாக (15-02-2023) ஏற்றுக்கொள்ளப்பட்டு இன்று மாலை முதல் தலைவர் பொறுப்பிலிருந்து அவரை விடுவிக்கத் தீர்மானிக்கப்படுகிறது. உப தலைவர் திரு வெ ஐயப்பன் அவர்கள் தலைவர் பொறுப்பை கூடுதலாக ஏற்று செயல்படவும் இந்த செயற்குழுக் கூட்டம் தீர்மானிக்கிறது .

5. இறுதியில் பொது செயலாளர் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

| | |
|---|---|
| ஒப்பம் | ஒப்பம் |
| வெ ஐயப்பன்<br>உப தலைவர் | வே கார்த்திகை ராஜன்<br>பொது செயலாளர் |

---

## EXECUTIVE COMMITTEE MEMBERS

| | | |
|---|---|---|
| President | : Thiru.V.Ayyappan | 75501 82438 |
| Vice President | (Vacant) | |
| Gen Secretary | :Thiru V Karthikai Rajan | 87783 12823 |
| Secretary (Finance) | : Thiru.B.Balaji | 93810 02983 |
| Secretary (Action Plan) | : Thiru.B.Balaji | 93810 02983 |
| Secretary (HQ) | :Thiru.J.Manohar | 98410 61748 |
| Secretary (Cultural Activity) | :Thiru.N.Santha kumar | 98845 10791 |
| Secretary (Publications) | : Thiru G Govindasamy | 98410 26766 |
| Secretary (Public Relations) | :Thiru.N.Gunasekaran | 63803 60797 |
| Secretary (Legal Affairs) | :Thiru.A.Nafees Ahemed | 98418 03685 |
| Secretary (Training) | (Vacant) | |



# கேஸ் சிலிண்டர்
## பில்லுக்கு மேல் கூடுதல் பணம் கேட்கிறார்களா?

**Cell: 9677116886 & 9677272789**

- சிலிண்டர் டெலிவரி செலவுக்கும் சேர்த்துதான் நம்மிடம் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஆகவே, பில் தொகைக்கு மேல் நீங்கள் ஒரு ரூபாய் கூட கூடுதலாக தரவேண்டியதில்லை.
- எத்தனை மாடிகள் இருந்தாலும் ஏஜென்சியினர் கூடுதலாக பணம் வசூல் செய்யக் கூடாது.
- தராசு கொண்டு வந்து எடைபோட்டு காட்டித்தான் சிலிண்டரை டெலிவரி செய்ய வேண்டும் இதன் மூலம் எடை குறைந்த சிலிண்டரை கண்டுபிடித்துவிடலாம்.
- கேஸ் பதிவு செய்து 2 நாளில் சிலிண்டர் டெலிவரி செய்யப்பட வேண்டும். அடுத்த சிலிண்டர் புக் செய்ய 21 நாட்கள் காத்திருக்க வேண்டியதில்லை. உடனே பதிவு செய்யலாம்.
- சிலிண்டர் டெலிவரி செய்ய வரும்போது நீங்கள் வீட்டில் இல்லை என்றால் போன் செய்து தகவல் சொல்ல வேண்டும் அல்லது கதவில் டோர்ஸ்லிப் ஒட்டிச் செல்ல வேண்டும்.
- புதிய கேஸ் இணைப்பு வாங்கும்போது ஏஜென்சியினர் நுகர்வோரிடம் கேஸ் அடுப்பு, குக்கர், ஸ்டேன்ட், லைட்டர் உள்ளிட்ட பொருட்கள் வாங்க வாடிக்கையாளரை கட்டாயப்படுத்தக்கூடாது.
- நுகர்வோர் டெலிவரி புக்கில் (Pass Book) சிலிண்டர் டெலிவரி செய்யும்போது அதில் டெலிவரி செய்பவரிடம் கையெழுத்து வாங்க வேண்டும்.
- கேஸ் சிலிண்டர் டெலிவரி செய்யும்போது பில் தொகைக்கு மேல் கூடுதல் பணம் கேட்டாலோ, எடை போட்டு காட்டவில்லை என்றாலோ புகார் செய்ய வேண்டிய எண்கள்.

**இண்டேன் (INDANE) - 1800 2333 555 / 044-24339236/46**
**இந்துஸ்தான் பெட்ரோலியம் (HP) - 1800 2333 555**
**பாரத் பெட்ரோலியம் (BP) - 1800 2333 555**

## பிச்சை காரர்களும் அரசு அதிகாரிகளும்

| பிச்சை காரர் | அரசு அதிகாரி |
|---|---|
| கிழிந்த துணி | நல்ல துணி |
| நம் இடத்திற்கு வருவார்கள் | நாம் அவர்கள் இடத்திற் செல்வோம் |
| நாம் கொடுத்ததை வாங்குவார்கள் | அவர்கள் கேட்பதை நா கொடுக்க வேண்டும் |
| நாம் கொடுப்பது 50பைசா முதல் 5ரூபாய் வரை | அவர் கேட்பது 50 ரூபாய் முதல் 50 கோ வரை...? |
| இவர்கள் கேட்டால் மறுத்துவிடலாம் | இவர்கள் கேட்டால் கொடுத்துவிடனும் |
| இவர்கள் கேட்பது அன்றாட வாழ்விற்கு | இவர்கள் கேட்பது ஆடம்பர வாழ்விற்கு |

**இந்தியாவின் உண்மை நிலை**

சேலத்தில் பரபரப்பு சம்பவம்

# போலீஸ் சுற்றி வளைத்ததும் லஞ்ச பணத்தை வாயில் போட்டு மென்று விழுங்கிய வி.ஏ.ஓ.,

- மருத்துவமனைக்கு அழைத்துச்சென்று பறிமுதல்
- சஸ்பெண்ட் செய்யப்பட்டார்

சேலம், பிப்.5: சேலத்தில் வாரிசு சான்றிதழ் வழங்க லஞ்சமாக வாங்கிய ₹4,500 பணத்தை கிராம நிர்வாக அலுவலர் வாயில் போட்டு விழுங்கிய தகவல் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சேலம் அழகாபுரம் பகுதியை சேர்ந்தவர் மாதேஷ்வரி. இவரது தந்தை கைலாசநாயுடு இறந்து போனார். இதனால், வாரிசு சான்றிதழ் பெறுவதற்கு வாழப்பாடியில் வசித்து வரும் தங்கை மகன் தினேஷ்குமார் உதவியை நாடினார். எம்பிஏ பட்டதாரியான அவர், இ-சேவை மையத்தின் மூலம் சான்றிதழ் கேட்டு விண்ணப்பித்தார். பின்னர், அழகாபுரம் கிராம நிர்வாக அலுவலர் குமரேசனிடம் இ-சேவை மையத்தில் விண்ணப்பித்தது குறித்து தெரிவித்துள்ளார்.

அப்போது ₹5 ஆயிரம் கொடுத்தால் சான்றிதழ் தருவேன் என விஏஓ குமரேசன் கூறியுள்ளார். இறுதியாக ₹4,500 கேட்டுள்ளார். இதையடுத்து தினேஷ்குமார், சேலம் லஞ்ச ஒழிப்புத்துறை போலீசில் புகார் கொடுத்தார். கடந்த 2ம் தேதி, லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகளின் ஆலோசனைபடி, ரசாயனம் தடவிய ₹4500ஐ கொடுத்தபோது, லஞ்ச ஒழிப்பு போலீசார் அவரை கைது செய்ய சுற்றி வளைத்தனர். இதனால் சுதாரித்துக்கொண்ட குமரேசன், லஞ்ச பணத்தை திடீரென வாயில் போட்டு மென்று விழுங்கினார்.

ஆனால் அந்த பணம் அவரது தொண்டையில் சிக்கிக்கொண்டது. உடனே அவரை சேலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று தொண்டையில் சிக்கிய பணத்தை வெளியே எடுத்துள்ளனர். இதனை வீடியோவாக லஞ்ச ஒழிப்புத் துறை போலீசார் பதிவு செய்துகொண்டுள்ளனர். பிறகு தான், விசாரணை நடத்தி அவரை சிறையில் அடைத்துள்ளனர். இந்த தகவல் வருவாய்த்துறை அலுவலர்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதனிடையே லஞ்ச வழக்கில் கைதான விஏஓ குமரேசன் மீது துறை ரீதியான நடவடிக்கையாக அவரை சஸ்பெண்ட் செய்துள்ளனர்.

### ₹25 ஆயிரம் லஞ்சம் வாங்கிய தாசில்தார் கைது

கோவை பெரியநாயக்கன்பாளையம் பகுதியை அடுத்த நாயக்கன்பாளையத்தை சேர்ந்தவர் சின்னராஜ் (61). இவர் ஊராட்சி துணை தலைவராக இருக்கிறார். இவர் கோவை லஞ்ச ஒழிப்பு போலீசில் ஒரு புகார் மனு அளித்தார். இந்த மனுவில், "பெரியநாயக்கன்பாளையத்தில் உள்ள இந்திரா காந்தி வணிக வளாகத்தில் உள்ள கடைகளை ஏலம் விட அதிகாரிகள் முடிவு செய்தனர். இந்த ஏலத்தில் பங்கேற்க நான் முடிவு செய்தேன். இதையடுத்து ரூ.5 லட்சத்திற்கான கடனளிப்பு சான்றிதழ் வழங்கக்கோரி வருவாய் துறையிடம் விண்ணப்பித்தேன்.

இதையடுத்து நான் கோவை வடக்கு தாசில்தார் கோகிலா மணியை சந்தித்து சான்றிதழ் வழங்கும்படி கோரினேன். அப்போது, அவர் ரூ.35 ஆயிரம் லஞ்சம் வழங்கினால்தான் சான்றிதழ் அளிக்க முடியும் என கூறினார்.

எனவே, இது குறித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்" என கூறியிருந்தார். புகார் மனுவை பெற்றுக்கொண்ட லஞ்ச ஒழிப்பு போலீசார், சின்னராஜிடம் ரசாயனம் தடவிய ரூபாய் நோட்டுகளை வழங்கினர். இதையடுத்து சின்னராஜ் நேற்று காலை கோவை வடக்கு தாசில்தார் கோகிலாமணியை சந்தித்து ரூ.25 ஆயிரத்தை வழங்கினார்.

அப்போது அங்கு மறைந்திருந்த லஞ்ச ஒழிப்பு போலீசார் கையும், களவுமாக தாசில்தார் கோகிலாமணியை பிடித்து கைது செய்தனர்.

Sat, 05 February 2022

# லஞ்சம் கேட்கும் அரசு ஊழியர்கள் மீது புகார் அளித்தால் ₹10 ஆயிரம் பரிசு

### ஆந்திராவில் அசத்தல்

திருமலை, பிப்.13-
லஞ்சம் கேட்கும் அரசு ஊழியர்கள் மீது புகார் அளித்தால் ₹10 ஆயிரம் பரிசு வழங்கப்படும் என்று லஞ்ச ஒழிப்புத்துறை டிஜிபி ராஜேந்திரநாத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ஆந்திர மாநில லஞ்ச ஒழிப்புத் துறை டிஜிபி ராஜேந்திரநாத் கூறியதாவது:

ஆந்திராவில் ஊழலை தடுக்கும் பொறுப்பு ஒவ்வொரு கலெக்டர், எஸ்பிக்களுக்கும் முதல்வர் ஜெகன்மோகன் கூறியுள்ளார். அதன்படி கலெக்டர் அலுவலகம், ஆர்டிஓ, மின்சாரம், தாசில்தார் அலுவலகம், காவல் நிலையம், அரசு மருத்துவமனைகள், 108, 104 சேவைகள் அல்லது வேறு எந்த அரசு அதிகாரிகள், ஊழியர்கள் தாங்கள் செய்யும் வேலைக்கு லஞ்சம் கேட்டால் 14400 என்ற எண்ணை அழைத்து புகார் தெரிவிக்கலாம். அப்போது லஞ்சம் கேட்கும் அதிகாரி, அல்லது ஊழியர் பெயரையும் தெரிவிக்கலாம். ஏசிபி 14400 என்ற செயலியை செல்போனில் பதிவிறக்கம் செய்து, பட்டனை அழுத்தி வீடியோ அல்லது ஆடியோ மூலம் உரையாடலை பதிவு செய்து புகார் அளிக்கலாம். இந்த புகார்கள் நேரடியாக லஞ்ச ஒழிப்பு துறை அலுவலகத்திற்கு செல்லும். இதன் அடிப்படையில் இந்த புகார்கள் முதல்வர் அலுவலகத்திற்கு செல்லும். அதன்பேரில் லஞ்சம் வாங்குபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் இவ்வாறு புகார் அளிப்பவர்களை ஊக்குவிக்கும் விதமாக ₹5 ஆயிரம் முதல் ₹10 ஆயிரம் வரை பரிசு வழங்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.



## Former judge of Allahabad HC booked in DA case

TIMES NEWS NETWORK

23.02.2023

**Lucknow:** Former Allahabad high court judge Justice SN Shukla was booked for disproportionate assets by the anti-corruption branch of Central Bureau of Investigation on Wednesday.

The CBI lodged another case against Justice Shukla after it found that the ex-judge had acquired assets and conducted expenditure worth ₹4.07 crore from April 1, 2014 to December 6, 2019. However, his income from all the known sources of income in the same period was only ₹1.53 crore.

Following this, CBI lodged an FIR under the charges of the Prevention of Corruption Act, against Shukla, his second wife Suchita Tiwari and one Saideen Tiwari, the ex-judge's brother-in-law, along with other unidentified persons.

The CBI said that first searches were conducted in the premises of the former judge and his second wife in the golf city area of Lucknow, and at the residence of his brother-in-law in Amethi. During the investigation of the case, mobile phone data extraction of SN Shukla revealed his association with Suchita Tiwari. It surfaced that the former justice also acquired assets in the name of Saideen.

*Full report on www.toi.in*




# அனைத்து மட்டங்களிலும் ஊழல் தலைவிரித்தாடுகிறது

**உச்சநீதிமன்றம் கவலை**

புதுடெல்லி, பிப். 26: அஸ்வினிகுமார் உபாத்யாயா என்பவர் உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள பொது நல மனுவில் 'கடுமையான குற்ற வழக்குகளில் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்ட நபர் அரசு துறையில் துப்புரவு பணியாளராகவோ அல்லது காவலராகவோ சேர முடியாது. ஆனால் அதே போன்ற குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டிருந்த ஒரு நபர் எம்எல்ஏவாகவோ, அமைச்சராகவோ கூட ஆகி விடலாம். அதனால் கிரிமினல் வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருந்த நபர்கள் தேர்தலில் போட்டியிடுவதற்கு தடை விதிக்கவேண்டும்' என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்த வழக்கு, உச்சநீதிமன்ற நீதிபதி கே.எம். ஜோசப் மற்றும் பி.வி.நாகரத்னா அடங்கிய அமர்வு முன் விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதி ஜோசப் கூறுகையில்," தலைவிரித்தாடும் ஊழலினால் சாதாரண மக்கள் கடுமையாக பாதிக்கப்படுகின்றனர். எந்த ஒரு அரசு அலுவலகத்துக்கும் செல்லுங்கள். பணம் கொடுக்காமல் எந்த ஒரு விஷயமும் அங்கு நடைபெறாது என்று பிரபல வழக்கறிஞரான நானி பல்கிவாலா தனது புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார். ஜனநாயகத்தின் பெயரில் நடக்கும் விஷயங்களை பற்றி நான் எதுவும் கருத்து கூறமாட்டேன். ஏற்கனவே இந்த விவகாரம் குறித்து விசாரித்த அரசியல் சட்ட பெஞ்ச் இது தொடர்பான சட்டத்தில் கூடுதலாக எதையும் சேர்க்க முடியாது என தீர்ப்பளித்துள்ளது. எனவே அரசுதான் இதை பற்றி முடிவெடுக்க வேண்டும்" என்றார்.

இந்த வழக்கில் 3 வாரங்களுக்குள் பதில் அளிக்கும்படி ஒன்றிய அரசு, தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட்ட நீதிபதிகள் விசாரணையை ஏப்ரல் 10ம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.






ANSWER BY FINANCE MINISTER (SMT. NIRMALA SITHARAMAN) ON 12-12-2022

AMOUNTS WRITTEN OFF BY BANKS IN THE LAST 4 YEARS

Rs. 8,48,186 CRORES

| | PUBLIC SECTOR BANKS | PRIVATE SECTOR BANKS | TOTAL WRITE OFF |
|---|---|---|---|
| 2018-19 | 183,201 | 53,064 | 236,265 |
| 2019-20 | 175,878 | 58,293 | 234,171 |
| 2020-21 | 131,894 | 70,888 | 202,782 |
| 2021-22 | 115,537 | 59,431 | 174,968 |
| TOTAL | 6,06,510 | 2,41,676 | 8,48,186 |

இலஞ்சம் தவிர்! Date of Publication: 5th of Every Month நெஞ்சம் நிமிர்!!

**நேர்மை நெறி- மார்ச் 2023**

| | |
|---|---|
| Registered with the Registrar of News Papers for India,New Delhi, Regn.No.TNBIL/2003/10419 | SSB/Chennai City North Divn Regn.No.TN/CCn/671/2018-20 |

PERMITTED TO POST WITHOUT PREPAYMENT VIDE WPP NO. TN/PMG(CCR)WPP533/2018-20




# நேர்மை நெறி

ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் **திங்களிதழ்**

**ஆசிரியர் : வே. கார்த்திகை ராஜன்**

**வெளியீட்டுச்செயலாளர் : ஜி கோவிந்தசாமி:**

Permitted to Posting 7th to 13th
Posted at Patrika Channel
(Egmore RMS/1) on 13 Mar 2023
Due to corona published online)

சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும்
அறத்து வழிப்படூஉம்

***பெறுநர்***

IF UNDELIVERED, PLEASE RETURN TO

**ACM, 155, KONNUR HIGH ROAD,**
AYANAVARAM, CHENNAI-23

Owned by Anti Corruption Movement, Chennai and published through online on its behalf of Govindasamy (9841026766) from No.155, "Nambakam" Konnur High Road, Ayanavaram, and Chennai-600 023 and printed by Thiru G Parthasarathy at VPS PRINTERS, No 292, TH Road, Chennai-600005 Editor: V.Karthikai Rajan

இலஞ்சம் கொடுக்காதீர்! இலஞ்சம் கொடுக்க விடாதீர்!!